உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௪] பராபவஹு ஐப்பசிமீ [பகுதி-௧௨

உள்ளுறை.


மாதைத் திருவேங்கடநாதர்:—பத்திராசிரியர். ௫௨௬

இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்:— ஸ்ரீமத்-சி. கணேசையர். ௫௩௬

மஹாபாரதம்:— ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப் பிள்ளை. ௫௪௩

அன்பு:— ஸ்ரீமத்-ஆத்மநாதன். ௫௪௫

சேனாவரைய வாராய்ச்சி:—ஸ்ரீமத்-அ. கோபாலையர். ௫௫௩

பெரியபுராண அநுமப(?) விளக்கம்:— ஸ்ரீமத்-ஜி. சதாசிவம் பிள்ளை. ௫௬0

ஸ்ரீபட்டர் வைபவம்:— ஸ்ரீமத்-வை. மு. சடகோபராமாநுஜாசாரியர். ௫௬௫

பிரதமவித்தியாப்பியாசப் பிரகடனம். ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியர். B. A., ௫௭௧

நல்லொழுக்கம்:— ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். ௫௭௫

மகாபாரதச் செய்யுட் பாடாந்தரம்:— ஸ்ரீமத்-சே.ரா.சுப்பிரமணியக்கவிராயர். ௫௮0

ஹிந்துசாகபட்சகனாயிருப்பதேன்?— ஸ்ரீமத்-ம. ஜேகதீச ஐயர் ௫௮௫

“மதுரைத்தலவரலாறு”:—பத்திராசிரியர் ௫௮௯

புத்தகக்குறிப்பு:— பத்திராசிரியர். ௫௯௩



மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

உ

சங்கத்தினின்று

# வெளிவரும் புத்தகங்கள்

சித்தமாய் விட்டன.

## 1. பன்னூற்றிரட்டு.

இரண்டாம் பதிப்பு.

மதுரைத்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய, பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்களால், தமிழ்நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து வெளியிடப்பட்ட இந்நூல், முன்னையவற்றோடு புதியவாக 500-பாடல்கள் பலநூலினின்று எடுத்துச் சேர்க்கப்பெற்று மதுரைத்தமிழ்ச் சங்கப்பதிப்பாக இப்போது வெளிவந்துள்ளது. இப்புத்தகம் டிம்மி அக்டோவாஸைஸில் 48-பாரங்களுடையது. நல்ல காகிதத்தில் சிறக்க அச்சிடப்பட்டது. இந்நூலின் அருமை பெருமைகளும், தமிழ்மக்களோவ்வொருவர் கையிலும் இப்புத்தகமிருத்தற்குரியதென்பதும் தமிழகம் அறிந்த உண்மையாதலால் அவற்றை இங்கே விரிக்க எண்ணமில்லை. இதன் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் இப்போதே எழுதிப்பெற்றுக்கொள்ளக்கடவர்.

## 2. வைத்தியசாரசங்கிரகம்.

இராமநாதபுரம் சம்ஸ்தானம் ஸ்ரீமாந்-பொன்னுசாமித்தேவரவர்களால், பல வருஷங்கட்கு முன்பு தக்க சுதேசிய வைத்தியரைக்கொண்டு அநுபவசித்தமான மருத்துவ முறைகளை யாவரும் அறியும்படி செய்விக்கப்பட்ட இந்நூலானது, இப்போது இச்சங்கத்தில் செவ்வையாக ஆராயப்பெற்று, இன்னும் பல இன்றியமையாத விஷயங்களும் சேர்த்து அச்சிடப்பட்டு முடிந்துள்ளது. ராயல் எட்டுப்பக்கத்தில், 70-பாரம் கொண்டது. ஒவ்வொருவர் கையிலும் இஃதிருத்தற்குரியது. இதன் விலை ரூபா. 3—0—0.

**☞ இச்சங்கப்பதிப்பாகிய மேற்கூறிய புத்தகங்களும் பிறவும், நமது "செந்தமிழ்" ச்சந்தாதாரர்க்கு ரூபாவுக்கு 4. அணாத்தள்ளி விலைக்குத்தரும்படி சௌகரியஞ்செய்து கொடுக்கப்பட்டிருக்குஞ் செய்தி கவனிக்கத்தக்கது.**

தபாற்கூலி பிரத்தியேகம்.

இங்ஙனம்,

மானேஜர்,

தமிழ்ச் சங்கம், மதுரை.

உ

# நம் "சந்தாதாரர்" களுக்கு

# அறிவிப்பு.

"செந்தமிழ்" நான்காந் தொகுதி இப்பகுதியோடு இனிது முற்றுகின்றது. இனித்தொடங்குவது ஐந்தாந் தொகுதியாகும். நம்பத்திரிகை, நான்கு வருஷகாலமாக, செந்தமிழறிஞர்களால் வெளியிடப்பெறும் அரியபெரிய அபிப்பிராயங்கள் பலவற்றை ஒருமுகமாக வெளியிட்டுத், தமிழுலகை மகிழ்வித்துவருதல் பலரும் நன்கறிந்த விஷயமாம். தமிழபிவிர்த்தியொன்றையே கருதி வெளிவரும் 'செந்தமிழை', போதியவளவு அபிமானிக்காத குறை தமிழ்நாட்டார் பாலுள்ளதாயினும், பத்திரிகை தொடங்கப்பெற்ற காலமுதலாக அதனை ஆதரித்துவரும் அபிமான சீலர்களுக்கு அவர்கள் உள்ளன்போடு நன்றிகூறுகின்றார்கள். இவ்வாறே என்றும் அவர்கள் 'செந்தமிழை' அபிமானிப்பார்களென்றும் நம்பப்படுகின்றது. இனி அடுத்துவரும் ஐந்தாந்தொகுதிக்குரிய 'சந்தா'த்தொகை ரூபா, நான்கையும் முன்பணமாக அனுப்பியுதவுமாறு நம்பத்திரிகாபிமானிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். முன் பணமனுப்பக்கூடாதவர்கள், வி. பி. தபால்வாயிலாக விடுக்கப்பெறும் ஐந்தாந் தொகுதியின் முதற்பகுதியை வழக்கம்போலவே, தயைசெய்து பணஞ்செலுத்திப் பெற்றுக்கொள்வார்களென்னும் உறுதியுடையோம்.

மானேஜர்

தமிழ்ச் சங்கம் மதுரை.

# மதுரைத் தமிழ்ச்சங்கத்தில்

## விற்கப்பெறும்புத்தகங்கள்.

"செந்தமிழ்" இரண்டு, மூன்றாந் தொகுதிகள் பைண்ட் செய்யப்பெற்று இப்போது விலைக்குத்தயாராகவுள்ளன. கையிருப்பிற் சிலபிரதிகளேயிருத்தலால், வேண்டியோர் உரியபோதே எழுதி வி. பி- தபால்வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கடவர். ஒருதொகுதி விலை ரூ 5. 'பைண்ட்' இல்லாதது ரூ 4—8—0.

### சங்கப்பதிப்பு.

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | ஐந்திணை யைம்பதுரை ... ... ... | 0 | 3 | 0 |
| 4. | இனியது நாற்பதுரை, கஞநூல் ... ... ... | 0 | 3 | 0 |
| 5. | புலவராற்றுப்படை (பழையது) ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் உரையுடன் ... ... ... | 0 | 10 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி உரையுடன் ... ... ... | 0 | 4 | 0 |
| 8. | பன்னிரு பாட்டியல் ... ... ... | 0 | 4 | 0 |
| 9. | அநுமான விளக்கம் ... ... ... | 0 | 4 | 0 |
| 10. | சங்கப்புலவராற்றுப்படையுரை ... ... ... | 0 | 4 | 0 |
| 11. | விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | 0 | 6 | 0 |
| 12. | திணைமாலை நூற்றைம்பது உரை ... ... ... | 0 | 4 | 0 |
| 13. | அட்டாங்க யோகக்குறள் ... ... ... | 0 | 1 | 0 |
| 14. | நான்மணிக்கடிகை (பழையஉரை) ... ... ... | 0 | 3 | 0 |
| 15. | யாப்பு அணியிலக்கணங்கள் [விசாகப்பெருமாளையரது பஞ்சலக்ஷண வினாவிடையினின்று எடுத்தவை] ... ... | 0 | 8 | 0 |
| 16. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 17. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 18. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் (கரு) ... ... | 0 | 1 | 0 |
| 19. | சுகசந்தர்சன தீபிகை ... ... ... | 0 | 12 | 0 |

### மற்றப்பதிப்பு.

| | | ரூ | அ | பை |
|---|---|---|---|---|
| 20. | தருக்காமிர்தம் ... ... ... ... | 0 | 8 | 0 |
| 21. | அத்துவித வாக்கியத் தெளிவுரை (ஸ்ரீ சிவஞானசுவாமிகள் செய்தது.) ... ... ... ... | 0 | 4 | 0 |

☞ விலாசம்:—மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜ்மெண்டு ஆபீஸ், மதுரை

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-௪] பராபவ௵ ஐப்பசி௴ [பகுதி-௧௨

## மாதைத் திருவேங்கடநாதர்.

முற்காலத்தும் இடைக்காலத்தும் கல்வியாலுங் கொடையாலும் தமிழை அலங்கரித்தற்கு முற்பட்டுவந்த அரசரும் பிரபுக்களும் பெருகியதுபோலப் பெருகாவிடினும், பிற்காலத்தே அத்தகைய பெருமக்கள் சிலரையேனும் இத்தமிழகம் உடைத்தாகாமற் போகவில்லை. பிற்காலமென்று இங்கே கொள்ளத்தக்கது இற்றைக்கு ௫௱-ஆண்டுக்குப் பிந்தியதேயாகும். இக்காலத்தே தமிழ்வேந்தர் மூவர்வாழ்வும் நிலைகுலைந்ததாயினும், அங்கங்கே அருகித்தோன்றிய சிற்றரசரும் பிரபுக்களுமே கல்விகொடைகளால் தமிழணங்கைச் சிறப்பித்தனர். இத்தகையோருள்ளே ஒருவர், ஈண்டுக் கூறப்புகும் திருவேங்கடநாதரும். இவர் இவ்வளவுபெருமைபெற்றோரில் ஒருவர் என்று நான் கூறுவது சிலர்க்குப் புதுமையாகத் தோன்றலாம். ஆனால், உண்மையை ஆராயும்போது, வித்துவானும் வள்ளலுமாய்ப் பின்னாளிற்கீர்த்திபெற்றவருள்ளே இவரவ்வளவு சிறப்பாளர் மிகச்சிலராகவேயிருந்தனரென்பது விசதமாகின்றது. அன்றியும், அந்தணரில் இத்தகையவள்ளலொருவர் விளங்கித் தமிழணங்கைச்சிறப்பித்தனரென்றல் அது புகழத்தக்கதன்றோ? ஆதலால், இப்பெருந்தகையின் வரலாற்றை ஆராய்வது இப்பத்திரிகைநோக்கத்துக்கேற்றதொன்றேயாம். இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாதநூல்களாயிருந்தவை, பிரபோதசந்திரோதயம், இலக்கணவிளக்கம், பணவிடுதூது* நெல்ஸன்துரையவர்கள் 'மதுரைநாடு' முதலியன. இவற்

* இந்நூல், ஏட்டுப்பிரதியில், இத்தமிழ்ச்சங்கபுத்தகசாலையில் உள்ளது. இஃது, இற்றைக்கு ௩௰-வருஷங்கட்கு முன்பு, அச்சிடப்பட்டதென்று தெரிகிறது.

றுள், திருவேங்கடநாதர்வரலாறறிதற்குப் பேருதவியாய் நின்றது பணவிடுதூது என்னுஞ் சிறுநூல். இஃது இன்னாரியற்றிய தென்று அறியப்படவில்லையாயினும், பாண்டிநாட்டினராய், திருவேங்கடநாதரது அபிமானத்திற்குப் பெரிதும் உரியவரான புலவரொருவரால் இயற்றப்பட்டதென்பது மட்டில் நன்குவிளங்குகிறது†. திருவேங்கடநாதரைப்பற்றிப் பொதுவாக அறியப்பட்ட செய்திகளினும் விசேடமாகப்பலவற்றை இவற்றினின்று அறியக்கூடியதாயிருந்தமையால், அவற்றைச் செந்தமிழபிமானிகளும் அறிந்து மகிழுமாறு எழுதத் தொடங்குகிறேன்.

திருவேங்கடநாதர் சோழநாட்டிலே மாதை என்னும் ஊரில் அந்தணர்வருணத்திலே ஸ்மார்த்தவகுப்பிற் பிறந்தவர். மாதையென்பது, கூடலூர் 'ஜில்லா'வில் விழுப்புரத்துக்குப் பக்கத்துள்ள திருவாமாத்தூர் என்னுஞ் சிவஸ்தலமாம். "மேதிக் குலஞ்சொரி பால்கயன் மாந்தும் விரைப்பழன மாதைக் கடவுள்" என வழங்கும் பாடல் "திருவாமாத்தூர்க்கோவை"யிலுள்ளதென்று குறிக்கப்பட்டிருத்தல் காண்க.‡ திருவாமாத்தூர் நடுநாட்டிலுள்ள திருப்பதியாயினும், பிற்காலத்திலே அப்பிரதேசம் சோழநாட்டைச்சார்ந்ததாகவே கொள்ளப்பட்டது. திருவேங்கடநாதர் பரம்பரைப்பிரபுகுலத்திலே உதித்து இம்மாதைநகர்க்கு அதிபராய் விளங்கினவர். இவர் தந்தையார் பெருமாளையர் என்பார். இவருடன் பிறந்தவர்கள் ஐவரென்றும், அவருள் இவர் இரண்டாவது சகோதரரென்றும் தெரிகின்றது. இவர் சகோதரராவார்:—கிருஷ்ணஐயர், மணிவண்ணப்பெருமாளையர், இராசகோபாலஐயர், கனகசபாபதிஐயர், வேங்கடராமஐயர் என்போர்.§ திருவேங்கடநாதர் இளமையிலே வேதவேதாங்கங்களிலும் தமிழ்த்துறைகளிலும் வல்லவராயும் அன்புஅருள் ஈகை முதலியவைகட்கு இருப்பிடமாயும் விளங்கினர். இவர் முன்

---

† "தாய்த்துணைபோலெங்கள் தமிழ்ப்பாண்டி நாடாள
வாய்த்தவெங்க டேச மகிபாலன் ... ... ...
முத்தமிழ்வா ணர்க்குள் முழுநோக்க மென்னிடத்தில்
வைத்தவெங்க டேச மகிபாலன்"—பணவிடுதூது.

‡ செந்தமிழ்த்தொகுதி-௪, பக்-௩௯௪.

§ பணவிடுதூது.

ஞோர் அக்காலத்துச் சோழபாண்டியநாடுகளையாண்டநாயகவரசரால் பெருத்த கௌரவமும் அபிமானமும் பெற்று லௌகிகத்தலைவராய் விளங்கினமையால், அம்முறைப்படியே, வைதிகஞானத்துடன், அரசரியக்கும்படியான லௌகிகஞானமும் இவரிடத்தே மிகுதியாக அமைந்திருந்தது. இவரது அளவற்ற—கல்வித்திறமும் குணவிசேடங்களும், லௌகிகஞானமும் பாண்டிநாட்டு நாயகவரசனைப் பெரிதும் வியப்புறுத்தவே, அவர் இவரைத் தம்மந்திரிகளுள் ஒருவராக்க விரும்பினர். மதுரையில் அப்போது ஆட்சிபுரிந்தவர் ரங்ககிருஷ்ண முத்து வீரப்பநாயகர் என்பார். இவர் கி. பி. 1682-ஆண்டில்பட்டம் பெற்றவர்*. தம்தந்தை சொக்கநாதநாயகர் இறந்ததும், பகைவரால் அலைப்புண்டு கிடந்த தம் நாட்டை, ஆண்டில் மிகவிளையராயிருந்த இவரே ஒழுங்குபடுத்தவேண்டியவரானார். கூரியபுத்தியும், சுருசுருப்பும், நிர்வாகத்திறமையும அவ்விளம்பருவத்தே ரங்ககிருஷ்ணர் மிகுதியாகப் பெற்றிருந்தாராயினும், தமக்குத்துணையாக நின்று உண்மையுடன் அரசியல் நடாத்தவல்ல அதிமேதைகள் சிலரை அவர் ஆராய்ந்துதேறவேண்டியதாயிற்று. ஆகவே, அத்தகுதியெல்லாம் ஒருங்கு வாய்ந்த திருவேங்கடநாதரைத் தம மந்திரிகளுள் ஒருவராய் அமர்த்திக்கொண்டனர். கொள்ளவே, அவ்வுத்யோகப் பொறுப்பை வெகு கவலையுடன் திருவேங்கடநாதர் தாங்கினவராகி, அரசியலிலிருந்த சீர்கேட்டையெல்லாம் நீக்கி அரசனுக்கும் குடிகட்கும் அளவற்றமகிழ்ச்சிவிளைத்தார். பணவிடுதூதுடையார் திருவேங்கடரது ஆட்சிச்சிறப்பை அடியில் வருமாறு புகழ்கின்றனர்—

"தேசவிவ காரம் செகத்திலுள்ள செய்து துரை
வாசல் விவகார மற்றெவையும்— யோசனைசெய்
மந்திரி மாரு மறுமன்ன ரேவலரும்
தந்திரி மாரும் தளாதிபரும்—முந்தும்
தினசரிதக் காரர்களும் சீமைக் கணக்கங்
களுதினம்வா சிக்கு மவரும்—கனமுடைய
வர்த்தகருங் குச்சரரு மாராட ருங்கொலுவில்

---

* இவ்வரங்ககிருஷ்ணர் தாயாராகிய மங்கம்மை என்னும் மூதாட்டி தஞ்சைநாயகவரசர் மகளாதலின், அவ்வம்மைவாயிலாக மாதையாரது அருமை பெருமைகளை அவள் புத்திரர் கேட்டிருக்கலாம்.

தத்தம் வரிசைகொடு தாநிற்ப—நித்தரொக்கச்
சாளிகை கட்டிவருந் தந்திரமும் பிந்திவரும்
பாளையக் காரர் பணங்களுக்கங்—காளனுப்பும்
வல்லமையுங் கேட்கும் வரியோலைக் குத்தரங்கள்
சொல்லுவதி லேநினைவின் சூக்குமமும்—எல்லைகண்டு
கூறப் படாத குளப்பாய்வுங் காற்பாய்வும்
ஏறப் பயிர்கொளுத்து மேற்பாடும்—பேறுதரும்
தேவா லயத்திற் றினப்பூசை தப்பாமல்
வேவா ளனுப்பும் விசாரிப்பும்—நேர்வாகக்
காணிக்கைக் காரர் கணக்குக்கேட் டவ்வவர்தி
ராணிக்குத் தக்கதிட்டஞ் செய்வதுவும்—பாணித்துச்
செய்யு நயபயமுஞ் சேருஞ் சனங்களுக்கென்
னையன் புரியும் அரவணைப்பும்—வையகத்தில்
மற்றொருவ ருக்கு வருமோ வராதென்று
கொற்றவரெல் லாமெடுத்துக் கொண்டாட—முற்றும்
திருவடி தேசமொரு செங்கோல் செலுத்தும்
பருவமெல்லா நன்றுப் பழகி—ஒருமுகங்கொண்
டட்டவணை யிட்டதுபோ லத்தனையுந் தானிருந்து
சட்டமிடு கின்ற சமுகத்தான்”

“திக்கெலாம் வந்து திறையளக்குஞ் செங்கோன்மைச்
சொக்கநா தேந்த்ர துரந்தரிசன்—முக்யமுள்ள

* * ராசரிக,

முத்திரைபெற்ற ரங்ககிருஷ்ண முத்துவீ ரேந்த்ரனருள்
வைத்தகொற்ற வாசலுக்கோர் மந்திரியாய்—மொத்தக்
கணக்கைவகை கண்டு கற்பித்த பேர்க்குப்
பணிக்குறைவா ராமற் பணித்து—வணக்கமில்லா
வீட்டுவரி யெப்பொழுதும் வேண்டா மெனநிறுத்திக்
காட்டுவழிச் செல்வாரைக் காப்பாற்றி.”

ரங்ககிருஷ்ணநாயகர் திருவேங்கடநாதரது ‘நன்மாணுமமுபுல’த்தையும் ஆட்சித்திறத்தையுங் கண்டு உவப்பும் வியப்புமடைந்ததோடு, அப்போது, திருநெல்வேலி நாடு ஒழுங்கின்றிக் கிடந்தமையால் அதைச் சீர்ப்படுத்த இவரையே தம்பிரதிநிதியாக அனுப்ப எண்ணினர். மதுரைநாயகர்க் குட்பட்டிருந்த திருநெல்வேலியும் திருச்சிராப்பள்ளியும் தூரவிடங்களாதலாலும், ஆட்சிபுரிவதில் இ

டையூறுகள் அங்கு அதிகமாயிருந்தமையாலும், நீதிப்புலனும் நிர்வாகத்திறமையுமிக்க மேதாவியாலன்றி அவற்றையாளல்கூடாததாகவிருந்தது *. அதிலும் ஒழுங்கின்றிக் கிடந்த தம்முழுநாட்டையும் சீர்ப்படுத்த முயன்ற ரங்ககிருஷ்ணநாயகர் அத்தூரநாடுகளை ஆளவல்ல தக்கநிர்வாகிகளை விரும்பல் இயல்பன்றோ. ஆகவே, திருநெல்வேலி நாட்டுக்குத் திருவேங்கடநாதரே ரங்ககிருஷ்ணரால் குறிக்கப்பட்டு, அரசர்க்குரிய எல்லாவரிசையுடனும் தம் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். இதனை,

பூதலத்தை, ஏகசக்ர மாப்புரக்கும் ராஜதா னிக்கிணங்கும்
பாகுபெற்ற நெல்வேலிப் பட்டணத்தில்—ஓகையுடன்
மேலா மரமனைக்குண் மேவிக் கொலுவிருந்து
மாலை புகுந்து வரும்வேளை.....ரங்ககிருஷ்ண
முத்துவீ ரேந்த்ரன் முழுவரிசை நந்தனுப்பும்
கோத்துமணித் தண்டிகைமேற் கொண்டேறிச்—சித்தம்
விரும்பியள கேசன்போல் வீதிவலம் வந்து
திரும்பி யரமனைக்குட் சென்று—பெரும்பார்க்
கிறையவனெங் கோமா னிரங்கவிலா சத்தே
நிறைகொலுவாய் வீற்றிருக்கு நேரம்—நறைமலர்ப்பூங்
கொத்தலர்தார் மார்பன் கொலுவிருக்குஞ் சிங்கார
மத்தனையுங் கண்டே னகங்குளிர்ந்தேன்—மெத்தமெத்தப்
போசன் சமூகம் பொலிவென்பார் மாதைவெங்க
டேசன் சமூகத்துக் கீடாமோ”

எனவரும் பணவிடுதூதுக கண்ணிகளால் உய்த்துணர்க. இவர் திருநெல்வேலியில் அரசப்பிரதிநிதியாய் வெகுதிறமையுடன் ஆட்சிசெய்தவரென்பதற்கு, “ரங்ககிருஷ்ணநாயகர் காலத்தே திருநெல்வேலி நாடு மிகச்செவ்வையாக அவர்மந்திரியால் ஆளப்பட்டுவந்த”தென்று திருவேங்கடநாதரது பெயரைக்குறியாமலே, நெல்சன்துரையவர்கள் தம் ‘மதுரைத்தேசம்” என்னும் நூலில் ஆதாரங்காட்டுகிறார். † இவ்வாறு, அங்கே இவர் திறமைபெற்ற அரசப்பிரதிநிதியாய் விளங்கினரென்று நமக்குத்தெரியவரினும், எத்தனைகாலம் அவ்வுத்தியோ

* Nelson's Madura country, Part III, Page 146.
† Do. Do. Do. 147.

கத்தில் அமர்ந்திருந்தனரென்பது துணியக்கூடவில்லை. இவரை அபிமானித்த ரங்ககிருஷ்ணமுத்துவீரர் தாம் பட்டத்துக்கு எந்த எ-வது ஆண்டில் இறந்துவிட்டார். அவருடைய சிறிய குழந்தைக்குப்பிரதியாக அவர்தாயார் மங்கம்மை என்னும் உத்தமி அரசியலை ஏற்று ஆண்டனர். இவ்வம்மை நாளிலும் திருவேங்கடநாதர் திருநெல்வேலியை மேற்பார்த்து வந்திருக்கலாமென்று தெரிகிறது. ஏனெனில், கி. பி. 1700-வருஷம், திருநெல்வேலிச் சீமையில், பலபெரிய புலிகள் காட்டுவழியே வரும் பிரயாணிகளைக் கொன்று பேரச்சத்தை உண்டாக்கிவந்தன வென்றும், மங்கம்மை அவற்றின் கொடுமையை நீக்க ஆணையிட்டபடி, அப்புலிகளெல்லாம் கொல்லப்பட்டுக் காட்டுவழிப்போக்கர்க்கு சௌகரியஞ் செய்யப்பட்டதென்றும் சரித்திரகாரர் * கூறியுள்ளார். இதேசெய்தி, "காட்டுவழிப் போவாரைக் காப்பாற்றி" என, திருவேங்கடநாதர் திருநெல்வேலியில் நடத்திய அரியசெயல்களுள் ஒன்றாகப் பணவிடுதூது கூறுகின்றது. இஃது அவர் கி. பி. 1700-லும் ஆட்சிபுரிந்தவரென்பதற்குச்சான்றாம். இவரைப் போலவே கல்விகொடைகளாற் பெரும்புகழ் பூண்டு விளங்கிய இராசை வடமலையப்பபிள்ளையன், மாதையார்க்கு முன்னே பின்னே திருநெல்வேலியைத் திறமையுடன் ஆண்டவர். இனி, பட்டத்துக்குரிய தம்பேரனாகிய விஜயரங்கசொக்கலிங்கநாயகர்க்கு உரியபருவம் வந்ததும் அவரிடம் கி. பி. 1705-ல் மங்கம்மை அரசியலை ஒப்பித்தனர். இக்காலத்தேதான் திருவேங்கடநாதர் திருநெல்வேலியைவிட்டு நீங்கியிருக்கவேண்டும். ஆயினும், மதுரை அரசியலில் நீண்டகாலந் தலைமைவகித்தவருள் இவரும் ஒருவராக விளங்கினரென்றே தோற்றுகிறது. இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவராயும் பிரபுகுலதிலகராயும் இருந்தமையால், அரசப்பிரதிநிதியாய் இவர் ஆட்சிபுரிந்தகாலத்தும் அதன் பிற்காலத்தும், வித்வான்களுக்கெல்லாம் பேராதரவாயும் பல குடும்பங்களையும் காப்பவராயும் விதரண சீலராயும் விளங்கினர். பணவிடுதூதுடையார் இவரது நற்குணங்களைப் புகழ்ந்து கூறுவன வருமாறு:—

"கோபாலன், செம்பொ னடிவணங்குஞ் சென்னியான் வேற்றரசர்
பைம்பொன் முடிவணங்கும் பாதத்தான்—விம்பமணிக்

---

* Nelson's Madura country. Part III. Page. 226.

கங்கணமு மேற்போர் கலிகளெல்லாந் தீர்ப்பனென்ற
கங்கணமு நீங்காக் கரதலத்தான்—சங்கையுள்ள
வெஞ்சொற் களைந்துகல்வி மேலோ ரொடுத்தியம்புஞ்
செஞ்சொ லுகந்த திருச்செவியான்—விஞ்சுபெருங்
கல்விக் கடலனையான் கண்டோர் பசிதீர்க்குஞ்
செல்வக் கருணைத் திருமுகத்தான்—மெல்லப்
புடைபரந்த தெள்ளமிர்தம் போற்கருணை வெள்ளம்
கடைபரந்த செங்கமலக் கண்ணன்—புடைசென்
றடுத்திட்ட பேர்க்கு மயலார்க்கு முண்மை
நடுத்திட்ட மேயுரைக்கு நாவான்............
விந்தமல ரோனீன்ற விப்ரகுல தீபமென
வந்தவெங்க டேச மகிபாலன்—சந்ததமும்
தாய்த்துணைபோ லெங்கள் தமிழ்ப்பாண்டி நாடாள
வாய்த்தவெங்க டேச மகிபாலன்....................
முத்தமிழ்வா ணர்க்குள் முழுநோக்க மென்னிடத்தில்
வைத்தவெங்க டேச மகிபாலன்"

திருவேங்கடநாதர், கண்ணபிரானிடத்திற் பரமபக்தியுடையவர். இதனை மேற்காட்டியவற்றின் முதலடியாலும், மெய்ஞ்ஞானவிளக்கத்து முதலினும் ஈற்றிலும் வரும் வாழ்த்துக்களாலும் உணர்க. இவர் "கோபாலன்" என அமைந்த முத்திரையுடையவரென்பதும், தம் நிருபங்களின் முதலில அம்முத்திரையிட்டே ஆணைசெலுத்திவந்தவரென்பதும் "நீதிபெறு முத்திரை நிருபமகோ பாலனென, ஆதிமுதலொப்பமிடு மாணையான்" என்னும் பணவிடு தூதடியால் தெரிகின்றன. இவர் இல்லறத்திலிருந்து இலௌகிகத்தலைமைபூண்டு விளங்கினும், சாஸ்திரமெல்லாம கற்றுத்தெளிந்த பரமவேதாந்தியானமையால், அவற்றில், தாமரையிலையிற் றண்ணீர்போல ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தனரென்பர். இவர் இன்னராதலை; இவர்நூலின் பாயிரத்தில் வரும் இரண்டு செய்யுள்கள் நன்கு விளக்குமாறு காண்க.

"மேயபற் பலதுறை மேற்கொண் டெய்பினும்
எயவில் வாழ்க்கையி லிருந்து மன்னதிற்
பாயுநன் மதுமலர்ப் பதுமப் பாசடைத்
தூயதண் புனலெனத் தோய்ந்துந் தோய்ந்திலான்.

"மனையறம் பூண்டுநல் வாழ்வின் வைகியும்
அனையபல் கிளைஞரோ டளவ ளாவியும்
நனியுல களித்துமெய்ஞ் ஞான மெய்திய
சனகனைப் போலிருந் தருளுந் தன்மையான்"

திருவேங்கடநாதர்க்கு வேதாந்தோபதேசஞ் செய்த ஞான குரு "இராகவாநந்தர்" என்னும் பரமஹம்சர். திருவேங்கடர் அரசியலிற்றலைமை பூண்டு, நுண்ணுணர்வும் நிர்வாகத்திறமும் விதரணமுமுதலியவற்றால் வெகுஜனோபகாரியாய் விளங்கிய காலத்திலே, இவர்குரு இராகவாநந்தரது தரிசனத்தை ஒருகால் இவர் பெறநேர, அப்போது, ஆசிரியர் இவரைநோக்கி, "புருஷார்த்தங்களுள் அறம்பொருளின்பங்களை உலகத்தோர் பெறச்செய்யும் நீ, எஞ்சிய வீட்டையு மடைதற்குக் கருவியாகிய ஞானநூலொன்று இயற்றிப் போதுக" என்று கட்டளையிட, அதற்கு, "ஸ்வாமி! தேவரீர்போன்ற முற்றத்துறந்த பரமஞானிகட்கன்றி, இல்லறத்திற் கிடந்துழலும் எம்மனோரால் அது கூடுவதில்லையே" என்று கூறிப் பணிந்தனர். இதுகேட்டு, அப்பெரியார் "உன்னிலுஞ்ஞானமுடையாருமுளரோ; ஞானிதுறவிலிருந்தாலென்ன? இல்லிலிருந்தாலென்ன? நீயே அது செய்யுந்தகுதியுடையை,செய்க" என்றுஆணையிட்டனர்.அவ்வாணைப் படியே, தக்கதொரு நூலியற்ற நினைந்து, சகல வேதாந்த சாஸ்திரங் களினுடையவும் சாரமாய், கிருஷ்ணமிசிரர் என்னும் மகாபண்டிதரால் வடமொழியிற் செய்யப்பட்ட பிரபோதசந்திரோதயமென்னும் நாடகத்தைக் காவ்யரூபமாகத் தமிழிலும் வடமொழியிலும் செய்து தந்தனர். இவற்றுள் தமிழ்நூலுக்கு மெய்ஞ்ஞானவிளக்கம்என்பது பெயராம். வடமொழியிற் காவியரூபமாகச் செய்த நூலைப்பற்றி ஒன்றுந்தெரியவில்லை. தமிழ்ப்பிரபோதசந்திரோதயம் 2012-விருத்தப்பாவில் 48-சருக்கங்களுடையது. வேதாந்த தத்துவங்களை உலகநீதிப்படியே பாத்திரங்களாக வகுத்து வெகு அழகாக விளக்குவது. "இந்நூலை வாசிப்பதால், பிரமம், மாயை, மனம், பிரவிருத்தி, நிவிர்த்தி, மோகம், அகங்கார முதலியவற்றின் இலக்கணங்களும், காமக்குரோதாதிகளுண்டாயபோது உண்டாகும் மெய்ப்பாடுகளின் தன்மைகளும், இன்னின்ன குணங்களுக்கு இன்னின்ன குணங்கள் மாறுபட்டிருக்கின்றன வென்பதின் சுவரூபமும், சுபுத்தியோடு

கூடிய விவேகமுடையவர்க்கே உபநிடதமும் கீதையும் பயன்படுமெ ன்பதும், உலோகாயதமுதலிய மதங்களின் தன்மைகளும், அவற்றின் கண்டனங்களும், தர்க்கம்—வேதாந்தசித்தாந்தத்தை யறிதற்கு அத் தியந்த சாதனமாமென்பதும், மீமாம்சம் முதலிய மதங்களின் சுவ ரூபங்களும், அவற்றுள் வேதாந்தசித்தாந்தத்திற்கு விரோதமாயுள்ள விஷயங்கள் இன்னின்னவென்பதும், வேதாந்தத்தின் நிச்சயமின்ன தென்பதும், வேறுபிறவுமறிந்துகொள்ளலாம். இந்நூலைத் திருவேங் கடநாதர், வடமொழிப் போக்குப்படியே மட்டுஞ் செய்யாது, கம்பர் போல, தம் விரிந்து பரந்த உள்ளக்கிடக்கைக் கேற்பவே, விரித்துப் பாடியிருக்கின்றார். இந்நூலின் "சொன்னோக்கும் பொருணோக்குந் தொடை நோக்கு நடைநோக்கும்" அறிஞரான் நன்கறியப்பட்ட வையாதலால், அவற்றின் அருமைபெருமைகளை இங்கெடுத்து மொ ழியப்புகின் வியாசம் நீண்டுவிடுமென்று நிறுத்துகிறேன். இந்நூற்கு உஅ-பாடல்களிலமைந்த அழகிய பாயிரமொன் றுண்டு; இஃது இன்னு ரியற்றிய தென்றுதெரியவில்லை. திருவேங்கடநாதர், தந்நூலை, அக்கா லத்துப்பிரசித்திபெற்ற தமிழ்வித்வானாகவிளங்கிய திருவாரூர்-வைத் தியநாதநாவலரைக் கொண்டுபார்வையிடச்செய்து வெளிப்படுத்தின ரென்பதுகர்ணபரம்பரை. அந்நாவலர் திருவேங்கடநாதரால் பெரிதும் அபிமானிக்கப்பட்டவரென்பதற்கு ஒருவிசேடச்செய்தியும் உண்டு. திருவேங்கடநாதர், தம்காலத்தில், எழுத்துச்சொற்பொருள்யாப் பணி என்னும் ஐந்திலக்கணங்களையும் மாணாக்கர் எளிதிற் கற்றற்கே ற்ற நூலொன்றுமின்மையால், அவ்வாறு ஒரு நூல் செய்விக்கக்கருதி யபோது, அதனை நன்கியற்றற்குரிய அறிவாற்றலுடையார் வைத் தியநாதநாவலரேயென்று தேர்ந்து, நாவலரை அவ்விலக்கணஞ் செய்து தருமாறு வேண்டினரெனவும், அவ்வேண்டுகோட்கிசைந்து "இலக்கணவிளக்கம்" என்ற அரிய பெரிய நூலை அப்புலவர் பெரு மான் முடித்துத் தம்பிரபுவையும் உலகத்தாரையும் மகிழ்வித்தா ரெனவும் சொல்லப்பட்டுள்ளது. இதனை, அவ்வைத்தியநாதநாவலர் புத்திரரும் மாணாக்கருமாகிய சதாசிவநாவலர், இலக்கண விளக்கப் பாயிரத்திலே கூறிய,

*

"வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாதைய ரதிபன் வரகுண மேரு
கல்விக் கெல்லை கருணைக் காகரம்
பெருமாண் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
திருமா னுலகஞ் செவ்விதிற் புரக்கும்
மேதகு புகழ்த்திரு வேங்கட நாதன்
ஓதின னுக வுவகைமீ தூர ..உரைத்தனன்"

என்னும் அடிகளால் உணர்க. வடமொழி தென்மொழிகளில் வல்ல வித்வசிகாமணியாய் அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த திருவாவடுதுறை ஆதீனத்து ஈசானமடம் சுவாமிநாததேசிகர் முதலியவர்களால் தங்கள் நூல்களில் புகழ்ந்து கூறப்பட்ட பெருநாவலரொருவரைத் தமிழகத்துக்குப் பயன்படுமாறு இலக்கணத்துக்கு விளக்கஞ் செய்யப்பண்ணிய வள்ளல் திருவேங்கட நாதரெனின், அவர் அக்கதனிலும் சிறந்த பெருமை யாது? இவ்விலக்கணவிளக்கம், "குட்டித் தொல்காப்பியம்" எனப்புலவராற் கொண்டாடப்பெற்ற பெருமையுடைய தென்பது பலருமறிவர்.

இவ்வாறு, மாதைமன்னனுகிய திருவேங்கடநாதர், லௌகிக வைதிகசிரேட்டராய், பொதுஜனங்கட்கு நன்மைபுரிந்தும், இரவலர்க்கும் புலவர்க்கும் பெரியகொடைகளுதவியும், நூல்கள் செய்தும், செய்வித்தும் தமிழணங்கைப் பெரிதும் அலங்கரித்தார். இக்காலத்தே விளங்கிய படிக்காசுப்புலவர், தம் அருமைபெருமைகளை யறிந்து தமக்குவேண்டிய வரிசைசெய்து பல்லக்குக்கூடச்சுமந்தன் புகாட்டிய கருப்பமுதலியாரென்னும் பிரபுவைப்பாடுங்காலத்தே,

"எல்லப்ப னம்மையப்பன் தருதிருவேங்கடநாத னெழிற்சீ ராமன்
வல்லக்கொண் டையன்மாதை வேங்கடேசுரன்போல வரிசைசெய்தே
செல்வத்தம் பியருடனே கத்தூரி மகன்கருப்பன் தெருவீதிக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோ ராயிரம்பொன் பரிசு தானே."

என்று, மாதைத் திருவேங்கடநாதரது வள்ளன்மையை உவமித்த திருத்தல், அவர் அக்காலத்து விளங்கிய பெருநிலைக்குத் தக்கசான்றாம். இவற்றால் மாதைத் திருவேங்கடநாதரது வரலாறு ஒருவாறு உணரத்தக்கது.

பத்திராசிரியர்.

சிவமயம்.

# இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்.

(ருஅஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

## கவந்தன் வதைப்படலம்.

பாரிட மேயிது பரவை சுற்றுறும்
பாரிட மரிதெனப் பரந்த மெய்யது
பாரிடம் வலம்வரப் பரந்த கையது
பாரிடந் தெடுத்தமா வனைய பாழியாய்.

என்னும் உரு-ம் செய்யுளில், 'பாரிடந் நெடுந்தமாவனைய பாழியாய்' என்பது 'பாரிடந் தெடுத்தமா வாயிற் பாழிவாய்' எனக் காணப்படுகின்றது. பாரிடந் தெடுத்தமா - விண்டு. மண்ணை விழுங்கிய பெரியவாயாதலின் அதனை இதற்கு உவமை கூறினர். இங்ஙனமின்றிப் பாழியாய் என்றல் இத்துணை சிறப்பின்று. ஆதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

வேறு

இல்லியல் புடையநீ ரளித்த வின்சொலாம்
வல்லியவ் வரக்கர்தம் மனையு ளாளெனச்
சொல்லினன் மலையெனச் சுமந்த தூணியன்
வில்லினன் செல்வனே மிதுலை வேந்தன்பால்.

என்னும் உசு-ம் செய்யுளில், 'சொல்லினன் மலையெனச் சுமந்த தூணியன்' என்பது 'சொல்லினன் மலையெனச் சுமந்த தோண்மிசை' எனக்காணப்படுகின்றது. மலையென்னும் அடைக்கு தூணி அடைகொளியாய் வருதல் சிறப்பின்றாதலானும், யான் மலைபோற் சுமந்த தோளின்மேல் வில்லையேந்தியவனாய் 'ஒரு வீரனென்று செல்வனே' என்னுமிடத்துப் பொருள் சிறத்தலானும் பின்னையதே பொருத்தமுடைத்து. 'இன்சொலாம்' என்பதும் 'இன்சொலின்' எனக்காணப்படுகின்றது. இதுவும் சிறப்புடைத்தாதல் காண்க.

ஆதிப் பிரமனுநீ யாதிப் பரமனுநீ
யோதி யுருபொருளுக் கப்பாலுண் டாகிலுநீ

சோதிச் சுடர்ப்பிழம்பு நீயென்று சொல்லுகின்ற
வேத முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார்.

என்னும் ௪௫-ம் செய்யுளில், 'வேதமுறைசெய்தால்' என்பது 'வேதமுரைசெய்தால்' எனக் காணப்படுகின்றது. 'முறைசெய்தால்' என்பதிலும் 'உரைசெய்தால்' என்பதே சிறப்புடைத்தாதல்காண்க.

## கவந்தன்வதைப்படலம்.

முற்றிற்று.

---

# கிஷ்கிந்தா காண்டம்.

---

## பம்பைப் படலம்.

மூன்றுரு வெனக்குண மும்மையா முதற்
றேன்றுரு வெவையுமிம் முதலைச் சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவ ரிடையி னின்றவன்
சான்றுரு வுலகினுக் குலகந் தாயினான்.

என்னும் ௧-ம் செய்யுளில், 'சான்றுரு வுலகினுக் குலகந்தாயினான்' என்பது 'சான்றவருணர்வினுக்குணர்வதாயினான்' எனக்காணப்படுகின்றது. 'உருவெவையுமிம்முதலைச் சொல்லுதற்—கேன்றுரு வமைந்து' எனக் கூறிப் பின்னும் 'சான்றுரு' எனக் கூறல் பொருத்தமின்மையிற் பின்னையதே பொருந்துமுடைத்து. பின்னையதற்கு அறிஞானிகளிற்கறிவாயினான் எனப்பொருள் கொள்க.

௵

களனவி லன்னமே முதல கண்ணகன்
றளமலர்ப் புள்ளொடு தயங்க வின்னதோர்
கிளவியென் றறிவருங் கிளர்ச்சித் தாதலால்
வளநகர்க் கூலமே போலு மாண்பது.

என்னும் ௭-ம் செய்யுளில், 'தளமலர்ப்புள்ளொடு தயங்க' என்பது 'தளமலர்ப் புள்ளொலி தயங்க' எனக்காணப்படுகின்றது. 'புள்ளொடு தயங்க' என்பதற்குப் புள்ளொலியோடு விளங்க எனப்பொருள்

கூறுமிடத்துப் புள்ளொலியோடு விளங்கியது இன்னது என்பது இங்கே காணப்படாமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

ஆரிய முதலிய பதினெண் பாடையிற்
பூரிய ரொருவழி புகுந்த போன்றன
ஓர்வில கிளவிக ளொன்றொ டொப்பில
சோர்வில விளம்புபுட் டுவன்று கின்றது.

என்னும் கசா-ம் செய்யுளில், 'பூரிய ரொருவழி புகுந்த போன்றன' என்பது 'பூரிய ரொருவழி புகுந்து போற்றல் போல்' எனக் காணப்படுகின்றது. 'புகுந்தபோன்றன' என்பதைக் கிளவியுடன் முடித்துப் பொருள் கூறலினும், 'போற்றல்போல்' 'விளம்புபுள்' என முடித்துப் பொருள் கூறல் சிறப்பாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

ஈறிட லரியமால் வரைநின் றீர்த்திழி
யாறிடு விரையகி லார மாதியா
வூறிட வொண்ணக ருரைத்த வொண்டளச்
சேறிடு பாணியிற் றிகழு நேரது.

என்னும் கசரு-ம் செய்யுளில், 'ஈறிடலரிய' என்பது 'ஏறிடவரிய' எனவும் 'வூறிட வொண்ணக ருரைத்த வொண்டளச்-சேறிடு பாணியிற் றிகழுநேரது' என்பது 'ஊறவொண்ணுதலியருரைத்தசந்தனச்-சேறிய் பரணியிற் றிகழுந்தேசது' எனவுங் காணப்படுகின்றது. 'ஈறிடலரிய' என்பது பொருட்சிறப்பின்மையதாதலானும், 'நகருரைத்த' என்பதும், 'பாணி' என்பதும், 'நேரது' என்பதும் பொருட்பொருத்தமின்மையவாதலானும் பின்னையவே பொருத்தமுடையன.

ஷை

நவ்வி நோக்கிய ரிதழ்நிகர் குமுதத்து நறுந்தேன்
வவ்வு மாந்தரிற் களிமயக் குறுவன மகர
மெவ்வ நீங்கிய பிறப்பினொ டிறப்பிவை யென்னக்
கவ்வு மீனொடு முழுகுவ வெழுவன கரண்டம்.

என்னும் ௧௭-ம் செய்யுளில்,'நறுந்தேன் வவ்வும்' என்பது 'நறுந் தேன் வவ்வி' எனவும், 'எவ்வநீங்கிய' என்பது, 'எவ்வமோங்கிய' எனவும், 'கவ்வு' என்பது, 'கவ்வி' எனவும், 'முழுகுவ எழுவன' என்பது, 'முழுகியே எழுவன' எனவுங் காணப்படுகின்றன. 'வவ்வும்' என்பது மாந்தரோடு முடிதலானும், நீங்கியபிறப்பென்றல்பொருந்தாதலானும், 'கவ்வும்' என்பது முழுகுதற்கு ஏதுவாகாமையானும், கவ்வுதலாற்றான் முழுகி எழுவனவாதலானும், பின்னையவைகளே பொருத்தமுடையன.

---

## அநுமப்படலம்.

சிந்தையிற் சிறிதுதுயர் மேவுறத் தெருமரலி
னொந்தயர்த் தனரனையர் நோவுறச் சிறியரல
ரந்தரத் தமரரலர் மானிடப் படிவர்மயல்
சிந்தனைக் குரியபொரு டேடுதற் குறுநிலையர்.

என்னும் ௪-ம் செய்யுளில், 'நொந்தயர்த்தனரனையர்' என்பது, 'நொந்தயர்த்தனரெனினும்' எனவும், 'அந்தரத்தமரரலர்மானிடப்படிவர்மயல்' என்பது 'அந்தரத்தவர்சிறுவர்மானுடத் துருவொடயல்' எனவுங் காணப்படுகின்றன. முன்னையவைகளிற் பொருட்சிறப்பின்மையிற் பின்னையவைகளே பொருத்தமுடையன.

௯

மயின்முதற் பறவை யெல்லா யணிநிறத் திவர்கண் மேனி
வெயிலுறற் கிரங்கி மீதா விருஞ்சிறைப் பந்தர் வீசி
யெயில்வகுத் தெய்து கின்ற வினமுகிற் கணங்களெங்கும்
பயில்வுறத் திவலை வீசிப் பயப்பயத் தழுவும் பாங்கர்.

என்னும் ௧௩-ம் செய்யுளில், 'வெயிலுறற்கிரங்கிமீதா விருஞ்சிறைப்பந்தர்வீசி—யெயில்வகுத்து' என்பது 'வெயிலுறற்கிரங்கி மீதா விரிசிறைப்பந்தர் நீங்கா—வியல்வகுத்து' எனவுங் காணப்படுகின்றன. 'வீசி-யெயில்வகுத்து' என்பது பொருட்சிறப்புடைத் தன்றாதலிற் பின்னையதே சிறப்புடைத்து.

ஷ

துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா நெறியுய்க்குந் தேவ ரோதா
மென்பெனக் குருகு கின்ற திவர்கின்ற தளவில் காத
லன்பினுக் கவதி யில்லை யடைவென்கொ லறித றேற்றேன்.

என்னும் கரு-ம் செய்யுளில், 'துன்பினைத்துடைத்துமாயத்தொல் வினைதன்னைநீக்கித்—தென்புலத்தன்றி' என்பது 'துன்பினைத் தொடுக்கு மாயத்தொல்வினைதன்னைநீக்கித்—தென்புலத்துறமல்' எனக் காணப்படுகின்றது. துன்பு தொல்வினைதன்னால்வருதலின், 'துன்பினைத் துடைத்து' என்றும், 'மாயத்தொல்வினைதன்னைநீக்கி' என்றும பகுத்துக்கூறல் வேண்டாமாகலானும, 'அன்றி' என்பது பொருட்சிறப்புடைத்தன்றாகலானும் பின்னையவை பொருத்தமுடையன.

ஸ்ரீ. கணேசையர்.

---

# மஹாபாரதம்.

---

(ருஅகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இனி இப்பாரதத்திலே ஆங்காங்கு வரும் கிருதந்தச் சொற்களுள்ளும் சிலவற்றை இங்கேகூறுதும். கிருதந்தமாவது கிருத்தினை இறுதியிலுடைய சொற்கள். கிருத்து - வினைப்பகுதியின் மேல்வரும் பெயர் விகுதி.

காயநம் - பாடுதல். யாநம் - ஊர்தி. யாமசரி - யாமத்திற்சரிப்போன். சாதர் - பிறந்தோர். நித்திராலு - நித்திரைசெய்வோன். விசயம் - வெற்றி. நிருபன் - மனிதரைக்காப்போன். ஆசுகன் - விரைந்து செல்வோன். சாரி - செல்வோன். காரியம் - செயல். விசாரம் - ஆராய்வு. பாவி - வரற்பாலது. விதூடகர் - கோமாளிகள். வாகம் - சுமப்பது. வித்துவான் - அறிஞன். துரோகி - துரோகஞ்செய்வோன், தனுசர் - தானவர். இன்னும்பல.

இனி அவ்வியய பதங்களுள்ளும் சிலவற்றைக் கூறுதும். ஆபாதசூடம் - பாதந்தொடங்கிச்சிரம் வரைக்கும். "ஆபாதசூடங்கருதித்தொழுதார் சிலமாதர்" (இராசசூயம். எஅ.) இங்கே ஆ என்பது அவ்வியயம். அது, வரைக்கும் எனப்பொருள்படும். ஆகன்னம் - காதளவும். "ஆகன்னமுறச்செம்பொன் வரைவில்வாங்கி" (அருச்சுனன்றீர்த்தயாத்திரை. சகூ.) அவிதா - யாதேனும் ஓராபத்தின்கண் கூறும் ஒரு குறிப்பு மொழி. "அவிதாவென் றணங்கனையாளழுதபோதே" (சூது. உ௫கூ.) அதவா - அன்றேல். "அதவா முரட்போர் தனக்கஞ்சுமோ" (பதினே. ௭௩உ) நாராயணாயநம - நாராயணனுக்கு வணக்கம். இங்கே நம என்பது அவ்வியயம். "நாளுவிதங்கொள்பரி யாளாகநின றருளும் நாராயணாயநமவே" (பதினெ-க.) அதியாதரம் - மிக்கவிருப்பம. இங்கே அதி என்பது அவ்வியயம். "சல்லியனையதியாதரத்தொடமையா" (பதினெ - ச.) ஓம் - உடன்பாட்டைபுணர்த்தும் ஓர் அவ்வியயம். "ஒன்றுங்கதிர்முடியாற்கோமென்றுரைத்தருளி" (கிருஷ்ண. சO.) இதரம் - அன்னியமானது. "இதரங்கடந்தானுதிட்டிரனென்று" (துருவாச. கஉ.) அந்தரம் - பின். நிரந்தரம் - என்றும். இவ்வாறு வரும் அவ்வியயச் சொற்கள் இன்னும்பல உள. அவை நிற்க.

இனி வடசொல்லடியாகப்பிறந்த வினைச்சொற்களுள்ளும் சிலவற்றைக் கூறுதும். மோகித்தல் - மயங்கல். வேகித்தல் - வேகங்கொள்ளல். சோகித்தல் - துயருறல். கம்பித்தல் - நடுங்கல். தம்பித்தல் - நிறுத்துதல். கதித்தல் - சொல்லல். சதித்தல் - அழித்தல். சுகித்தல் - சுகமுறல். சரித்தல் - போதல். சலித்தல் - அசைதல். வரித்தல் - வேண்டுதல். அங்குரித்தல் - முளைத்தல். புளகித்தல் - மயிர்சிலிர்த்தல். சாதித்தல் - கொல்லுதல். கோபித்தல் - செற்றங்கொள்ளல். காமித்தல் - இச்சித்தல். சிந்தித்தல் - நினைத்தல். இவைபோல்வன இன்னும் பல.

இனிச் சமாச பதங்களுள்ளும் சிலவற்றைக கூறுதும். சமாசமாவது இரண்டு மூன்று முதலியனவாகச் சேர்க்கப்பட்டு ஒன்று போல நிற்குந் தன்மையையுடைய சொல். சமாசம்-தொகை, சமுகம். "மா

ரகாகளம்'' "தாரகாயகம்" "பரிமளபுளகம்" என்பவைமுதலியன இருமொழிச்சமாசம். "பங்கசாதபரிமளம்" "கம்பநிசளமதாசலம்" "பானுராச சூனு" "கீதநாத பண்டிதன்" என்பவை முதலியன மும்மொழிச் சமாசம் "அதிதவளமத்தவாரணம்" "துருபதயாக சேனநிருபனும்" என்பனமுதலியன நான்மொழிச் சமாசம். "முககரகபோத மதகரி" (மூன்றும் போர். ௧௫) "சடாதுங்க மௌலிப்புரசூதனன்" (பதின்மூன்றும் போர் ௮0) "மானகவசவரராசதுரியோதனன்" (பதினெட்டு ௧௬௬) என்பன முதலியன ஐம்மொழிச் சமாசம். இவ்வாறு வருவன இன்னும் பல. அவைநிற்க.

இனி முதனூற்பொருள்கொண்டு உணர்தற் பாலனவாயகவிகளுள்ளும் சிலவற்றைக்கூறுதும்.

வாசவ னளித்த விமானமீ தொருவன் வசுவெனுஞ் சேதிமா மரபோன்
கேசர னெனப்போம்விசும்பிடைமனையாள் கிரிகையைநினைந்துடல்செழுமி
நேசமொ டுதய முருகுமக் கணத்தி னினைவற விழுந்த வீரியமெய்த்
தேசவனளித்த நதியிடைத் தரளத் திரளெனச் சிந்திய தொருபால்.

இங்கேகூறப்பட்டிருக்கும் சரித்திரம் வியாசபாரதத்திலே, ௫௪-ம் அத்தியாயங் கொண்டு அறியத்தக்கது. சேதி-சேதிதேசராசன். இதன் கண் தத்திதம் லோபமாயிற்று. கிரிகை-வசுராசன் மனைவி; மிரிகா என்பது கிரிகையெனத் தற்பவமாயிற்று.

அன்றெனக்கு நீயிசைந்த வவனிபாதி யமையுமற்
றின்றுனக்கு நின்றபாதி யான்வரைந்து தருகுவன்
குன்றெனக் குவிந்திலங்கு கொற்றவாகு வீரனே
உன்றனக்கு வேண்டுமென்ன வுயிரும்வாழ்வு முதவினான்.

இதனைக் "குன்றெனக் குவிந்திலங்கு கொற்றவாகு வீரனே, அன்றெனக்கு நீயிசைந்த வவனிபாதியமையுமற், றின்றுனக்கு நின்ற பாதி யான் வரைந்து தருகுவன்-உன்றனக்கு வேண்டு மென்ன வுயிரும்வாழ்வு முதவினான்" என்று மாறிப் பொருள் கொள்க. மாறிப்பொருள் கொள்ளாக்கான் முதனூலோடு மாறுபடும்.

அன்றென்றது துரோணசாரியர் தாமும், தமது தந்தைக்கு நண்பன் மைந்தனாகிய துருபதனும் பிரியாநண்பு பூண்டு அக்கினிவேச முனிவரிடத்திலே அஸ்திரசஸ்திர வித்தைகளைக்கற்றும், விலாசமு

*

ற்றும் வந்த பாலியப்பருவத்தையேயாம். துரோணாசாரியருடைய பிதாவின் பெயர் பரத்துவாசர். துருபதனுடைய தந்தை பெயர் பிருடதன். நீ யிசைந்த வவனி பாதி என்றது "என்னை வானமெய்தி யானேயிறைவ னானு, லுன்னையாளவைப்பேனுலகிற் பாதியென்றான்" என்றதை யான் விரும்பாதிருக்கவும் "அடைந்த நண்பின் றகவான் மிகவாதரியா" பாதி தருவேன் என்றதனை என்பது போதர 'நீயிசைந்த' என்றார்.

பழிமுடித்தற்கன்றி நின்இராச்சியத்தைச் சிறிதும் விரும்பினேமல்லேம் என்பது போதர அவனிபாதியமையும் என்றார். தெக்கிணபஞ்சாலம் பின்னர்க் கொடுக்கப்படுதலால் பாதி உத்தரத்தின் மேற்று. நின்றபாதி என்றது இப்பொழுதுதமதாக்கிய தேசத்திலே அவனுக்கு விடக் கருதும் தெக்கிணபஞ்சாலத்தினை. அருச்சுனற்குத் தோல்வியுறினும் பிறர்யாட்டு நின்புயவலியிற் குறைவில்லை என்பதுபோதரக் "குன்றெனக்குவிந்திலங்கு கொற்றவாகு வீரனே" என்றார். உன்றனக்கு வேண்டுமென்ன என்பதற்கு அந்தப்பாதிராச்சியம் உனக்கு அவசியம் வேண்டுமென்றுசொல்லி எனப்பொருள் கொள்க. இராச்சியமில்லாதவனுக்கும் இராச்சியமுடையவனுக்கும் நட்புண்டாகாது. மன்னரைச் சார்ந்து வாழுமியல்புடைய எனக்குப் பின்னும் நட்பு நிலைத்தற்கு அஃதவசியம் என்றவாறும். இது முதனூற் பொருள். வாழ்வு கொடுக்கும் இராச்சியத்தின் மேற்றாய்ச் சுட்டுப்பெருள்பட நின்றது.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

௨

# அன்பு.

(முன்றொடர்ச்சி.)

எவன் என் பொருட்டுப்பக்தியோடு, பத்ரம், புஷ்பம், பழம், ஜலம் இவைகளை அர்ச்சனைநிவேத்தியஞ்செய்கிறானோ, சுத்தமாயிருக்கிற மனத்தையுடையவனான அவனுடைய சக்தியினாலே கொடுக்கப்பட்ட அவைகளை நான் ஸ்வீகரிக்கிறேன். பத்ரம், புஷ்பம், பழம், தோயம் என்றவரிசை சொல்லுகிறதற்குக் காரணம் யாதெனில்:—

அவைகள், படிப்படியாய் ஒன்றன் மேல் ஒன்றாய் உயர்வுபற்றி இருக்கின்றமையால் என்று அறிக. இலை, மலர், காய், கனி, வித்து என்ற வரிசையானது, ஒன்று மற்றொன்றின் பரிணாமமாகி மேன்மையைக்குறிக்கும் உபமானமாகும்; வித்து ஆரம்பம், அதினின்று தளிர், பின்பு இலை, காய், கனி: கடைசியில் வித்து, ஆரம்பம் வித்து. அந்தம் வித்து. இடையில் பல பரிணாமங்கள். அதாவது மாறுதல்கள் உண்டாகின்றன. அம்மாதிரியே, கடவுளினின்று வந்தோம். அவரால் பல நாமரூபங்கள் பெறுகிறோம். அவரால் இயங்குகின்றோம். கடைமுறையில், அவராக ஆகின்றோம் என்பதை இந்த பத்ரம், புஷ்பம், பலம், தோயம் என்றவரிசை குறிப்பிடுகின்றது. தோயம் என்றால் ரசம். உபநிஷத்துக்களில்—கடவுளை "ரஸோவைஸ:" என்று சொல்லியிருக்கிறது. ஜீவராசிகள் கடவுள் அம்சம் என்று கீதை—15-ம் அத்தியாயம்—7-ம் சுலோகத்தில் சொல்லியிருக்கின்றது.*

(9) மேலும் பத்ரம், புஷ்பம், பலம், தோயம் என்றது பிரமரகீட நியாயத்தின் தத்வத்தை விளக்குகின்றது. முதலில் சிறகுள்ள வண்டு. அதன் கரு பின்பு. அக்கருவே புழுவாயும், அப்புழுவே தன் மேலுள்ள ரோமத்தை உதிர்த்து அதை வெளிக்கவசமாகவும், தன்னுள்ளிருந்து நூல் நூற்று அதை உட்கவசமாகவும் செய்து தன்னால் அமைக்கப்பெற்றுள்ள ஒரு கூட்டின் கண்ணுள்ள கூட்டுப் புழுவாகியும் பின்னர் அக்கூட்டுப்புழுவே ஓடு மூடிய புழுவாகியும் (chrysalis), கடைமுறையில் சிறகுகள் அமையப்பெற்ற வண்டாகியும் கூட்டைத்துளைத்துக்கொண்டு பறந்து வெளிபோறி விடுகின்றது. முதலில் வண்டு, கடையிலும் வண்டு, இடையில் பல விகாரங்களை ஒரு கருவே பெறுகின்றதுபோல, ஜீவனான உபாஸகன் முதலில் ஈசுவர அம்சன். கடைமுறையில், அன்பு-பக்தி என்ற சம்ஸ்காரவிசேஷத்தால் உபாஸியனாக ஆகிறான். இக்கருத்தை மனதில் உள்ளவராய், ஸ்ரீகிருஷ்ணபகவான் பத்ரம், புஷ்பம், பலம், தோயம் என்ற முறையை உபதேசித்துள்ளார் என ஊகிக்கலாம்.

---

* மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: ।
மந:ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி ॥

(10) இன்னும், ஆழ்வார்களின் பாசுரங்களில், ஒன்பதுவகை ஸம்பந்தமாக, பக்தியைச் சொல்லியுள்ளது.

1. விசேஷண விசேஷிய சம்பந்தம்.
2. ரக்ஷ்ய ரக்ஷக சம்பந்தம்.
3. சேஷ சேஷி சம்பந்தம்.
4. பர்த்திரு பாரியா சம்பந்தம்.
5. ஞாதிரு ஞேய சம்பந்தம்.
6. ஸ்வஸ்வாமி சம்பந்தம்.
7. சரீர சரீரிய சம்பந்தம்.
8. தார்ய தாரக சம்பந்தம்.
9. போக்திரு போக்கிய சம்பந்தம்.

இவற்றுள் பர்த்திருபாரியாசம்பந்தம் ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியாருக்கு இயற்கையாக அமைந்தது. ஆழ்வார்கள் பாசுரங்களை அந்தந்த சம்பந்தத்தைக் காட்டுவதற்கு இதில் எழுதின் விரியுமாகையால், பக்திமான்கள் அவைகளைத் திருவாய்மொழி, திருமொழி, இயற்பா முதலான புஸ்தகங்களில் கண்டுகொள்ளுக.

11 முக்கியமாக தாஸன், ஸ்நேகன், புத்ரன், பத்நி என்ற சம்பந்த பாவங்கள் அதிக பிரசித்தமாக உள்ளன. அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் என்ற ஞானிகள் நால்வர்கள், இச்சம்பந்தங்களுக்கு முறையே திருஷ்டாந்த மாவார்கள். இது பற்றி அவர்கள் திருநாமங்களைச் சொல்லுங்காலத்தில் இவ்வரிசையை அனுசரித்தேகூறுவார்கள்.

12. திருநாவுக்கரசு என்ற அப்பரின் அன்பு, தம்மை தாஸன் என்றும், இறைவனை யஜமானன் என்றும், உள்ள பாவனையின்கண்ணிருக்கின்ற அன்பு. இதில் தான்வேறு - இறைவன் வேறு - என்றும், தான் அற்பன் என்றும், அவர் பெரியர் என்றும், பக்தியும் அதனுடனே பயமும் கலந்திருக்கிறதென்றும் வெளியாகும். இவ்வன்பு பயபக்தியால் வெளியாகும். ஆனால் இவ்வன்பு தாழ்ந்தபடியாகத்தோற்றினும் இவர் அன்பு நிலையில் உள்ளார் இக்காலத்தில் இல்லை என்பது இவருடைய தேவாரங்களைப்படித்தவர்க்கு நன்கு விளங்கும்.

ஸ்ரீ சுந்தரர் அன்பு, தாமும் இறைவரும், சிநேகிதர் போல, ஒருவர்மேல் ஒருவர்நட்புப்பாராட்டினர் போலத்தோன்றுவது. இவ்வன்பில், தான் வேறு, இறைவன்வேறு என்ற பாவம்இருந்திடினும், தானும் இறைவனும் சமானத்தன்மையுடைய ரென்ற பாவம் நன்ருய் விளங்குகின்றது. இது இவர்புராணத்தையும், இவர் பாசுரங்களையும் படித்தால், நன்ருய் வெளியாகும். ஸ்ரீ ஞானசம்பந்தரின் அன்பு, பிதாவிடம் புத்ரனுக்குள்ள அன்பு. புத்ரன் பிதாவுடைய அம்சமாகிறான். "ஆத்மா வை புத்ர நாமாஸி" என்பது வேதவாக்கு. தானும் இறைவனும் தோற்றத்தில் வேருக இருப்பினும், உண்மையில், ஒன்றே என்ற பாவம் சிலசிலவேளைகளில் ஜனிக்கும். ஓரோர் சமயத்தில் ஞானசம்பந்தப்பெருமான் இறைவன் ஆணையைத் தம் ஆணையென உரைத்தருளுவர்.

"அடியார்கள்வானிலரசாள்வர்ஆணைநமதே" (கோளறு திருப்பதிகம்) எனவருதல் பற்றியுணர்க.

13. ஸ்ரீ மாணிக்கவாசகர் அன்போ, என்ன என்று சொல்லுவேன். இவருடைய உயர்வான அன்பிற்கு நிகரில்லை. இதுவே பரபக்தி. உயர்வற உயர்ந்தது. பர்த்தாவின்பால், பாரியைவைக்கும் பிரியமாம். கணவனிடம் மனைவிக்கு இருக்கும் அன்பாம.

"தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யும்மழை"

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிற உத்தமபத்நியின் அன்பு இங்கு கவனிக்கத்தக்கது,

"தொழுது எழுவாள்" என்றதினுல் முன்னினைவிலும், உறங்குங்கால் கனவிலும், பின்னினைவுவருங்காலிலும் எப்பொழுதும்தொழுவாள் என்றபடி; கணவனைத்தவிர வேறு நினைவு இல்லாள் என்றபடி. மாணிக்கவாசகர் திருக்கோவையில் தம்அன்பை - நாயகன் நாயகிசம்பந்தமாக, பலதுறைகளாக வைத்து அன்பின் உயர்வைப்படிப்படியாக அழகாக விளக்கியிருக்கின்றூர். கோவையார் உண்மை என ஒன்று எழுதியவித்வான் மாணிக்கவாசகர் தம்மை மணவாளனுகவும், இறைவனை நாயகியாகவும், பாவித்து இப்பாக்கள் சொல்லி

யிருப்பதாகக்கருதியுள்ளார். அதனால் அவர் அன்பின் குறி, மனவி யின்மேல் கணவன் வைக்கும் அன்புபோலாமென்று கொண்டாரா வர். ஆனால் திருவாசகத்தை உணர்வுஊன்றிப்பார்த்தால் மாணிக்க வாசகர் அன்பு ஒரு துறையில் நின்றதன்று. பத்ரம், புஷ்பம், பலம், தோயம், என்ற வரிசைப்படி மேன்மேலும் அபிவிர்த்தியாகிக்கொ ண்டேவந்து கடைமுறையில், வேற்றுமை அற்று, இரண்டறக்கல ந்து ஒன்றுபட்டதென்றே விளங்கும.

"இன்றெனக்கருளிஇருள்கடிந்துஉள்ளததுஎழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின் தன்மைநினைப்பறநினைந்தேன்நீயலால்பிறிதுமற்றுஇன்மை
சென்றுசென்று அணுவாய்த்தேய்ந்துதேய்ந்துஒன்றாந்திருப்பெருந்துறை
யு றைசிவனே, ஒன்றுநீயல்லைஅன்றிஒன்றுஇல்லையார்உன்னை அறியகிற்பா
[ரே."

இத்தகைய நிலைவரவேண்டுமானால் பத்னியாகஇருந்து கணவன் மேல்காதல் வைத்தலே உபமானமாகும்.

"செல்லாமைஉண்டேல்எனக்குறைமற்றுநின்
வல்வரவுவாழ்வார்க்குரை"

என்றகுறள், நாயகியின்பால் ஏற்றப்பட்டது. அம்மாதிரியாக, "செ த்திலாப்பத்து"என்றபதிகத்தில் தன்னன்பை இத்தன்மையதுஎன்று மாணிக்கவாசக சுவாமிகள் நன்கு விளக்கியிருக்கின்றார். மேலும கோவையார் உண்மைஎன்று எழுதியிருக்கின்றவர் அபிப்பிராயமும் ஒருவாறு ஒத்துக்கொள்ளக்கூடியதே. நாயகன்மீது நாயகியின் அன்பு அதிகமாக இருப்பினும், அதுவெளிப்படையாக இராமல், குப்தமா கவே இருக்கும். அது பெண்பால் ஸ்வபாவம். நாயகியின்மீது நாய கன் அன்போ வெளிப்படையாகப் பிரகாசிக்கும். இது ஆண்பால் இயல்பு; அதுபோன்று, மாணிக்கவாசகர் அன்புவெள்ளொளிபோன் று பிரகாசிக்கின்றமை அறிந்துகொள்க.

14. இதுகாறும் இதனைப்படித்தவர்களுக்கு ஒரு வினா உண்டா கும். நமக்கு இத்தன்மையான அன்பு உண்டாகுமா? சிலர் கொள் கை ஈசனிடம் அன்புவைப்பதற்கும் அவர் அருள்வேண்டும்.

"அவன் அருளாலே அவன் தாள்வணங்கி" (மாணிக்கவாசகர்)
"உணர்வினுள்ளேயிருத்தினேன்
அதுவும் அவனது இன் அருளே" (ஸ்ரீ சடகோபர்)

இதற்கு உபநிஷத்பிரமாணமுமுண்டு.* பின்னும்சிலர் அபிப்பிராயம் நம்முயற்சியும், வேண்டும். இறைவன் அருளும்வேண்டும். இவ்விருவகைக்கருத்தினை, மார்ஜாலக்கி சோரநியாயம், மர்க்கடகக்கி சோரநியாயம், என்ற இரண்டு உபமானங்கள் விளக்குகின்றன. அதாவது பூனைக்குட்டி நியாயம், குரங்குக்குட்டிநியாயம் என இரண்டு.

பூனை, தன் குட்டிகளைக் காப்பாற்றுமுறையில், குட்டிகள்பால் எவ்விதமுயற்சியும் அன்றித் தானே தன்வாயாற் கவ்விக்கொண்டு உற்ற இடத்திற் சேர்ப்பிக்கின்றவாறு போல, நம்மால் எவ்வித முயற்சியுமன்றி, பரமகருணையால், கடவுளே நம்மை இப்பிறவித்துன்பத்தினின்று அன்பின் வாயிலாகக் கரையேற்றுகிறார். இது முதலில் பிரஸ்தாபித்துள்ள நியாயம். குரங்கு காப்பாற்றும முறையில், குட்டிகள் தன் வயிற்றை அணைந்து கட்டிக்கொள்ளவும், தான் அதற்கு தன் வயிற்றை ஆதாரமாகக்கொடுக்கவும், இவ்விரண்டு தன்மையால் உற்ற இடத்தை நோக்கி, தான்தாவி, குட்டிகளைக் குரங்கு சேர்ப்பிக்கின்றது. இறைவன், அடிசேரவேண்டுமாறைல், சரீர சுத்தி, மனச்சுத்தி, ஆத்மசுத்தி என்ற பலசம்ஸ்காரங்கள் செய்யப்பெற்று, அவை மூலமாய் சித்தம் பரிபக்குவமாகி, கடவுளும் அருட் பிரசாதம் செய்ய, ஜீவன் மேனிலையெய்துகிறான். இது இரண்டாவது பிரஸ்தாபித்துள்ள நியாயம். சிலர், முந்தியது உயர் வென்பார். சிலர், பிந்தியது உயர்வென்பார். சாதாரணஜனங்கள் முயற்சி செய்யவேண்டியதை

---

* நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ நமேதயா நபஹுநா ச்ருதேந। யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா வ்ருணுதே தநூம்ஸ்வாம்॥

இதன்பொருள்.—இந்த ஆத்மஸ்வரூபம் வெகு வேதங்களைப்படிப்பதினாலாவது, தாரணாசக்தியினாலாவது, விசேஷமான சாஸ்திர சிரவணத்தினாலாவது, அடையத்தகுந்ததல்ல. ஆனால், இந்த பரமாத்மா எந்த (ஜீவ) ஆத்துமாவை இச்சிக்கிறதோ, அவனாலேயே தகுந்தது. அவனுக்கு இந்த பரமாத்மா தன்னுடைய பரமார்த்தஸ்வரூபத்தைப் பிரகாசிக்கச்செய்கிறது.

உத்தேசித்து பிந்தியதை நலம் என்று சொல்லிடினும் உண்மையில் அன்பின் விகாச அளவில், முந்தியதே உயர்வாம். ஏனெனில் பிந்தியதில், நான் வேறு என்றும், ஈசன்வேறு என்றும், பிரத்தியக்பாவம் உண்டு. இன்றேல் முயற்சி சித்திககாது. முந்தியதோ வென்றால் தான் என்ற பாவமே முற்றும் மறந்து அவனே அடைக்கலம் என்ற பூர்ணநம்பிக்கை கொண்டு நிற்கின்ற நிலை; இது பூர்ணம் பெற்றோர் நிலை.

> நினைப்பறநினைந்தேன்நீயலால்பிறிதுமற்றின்மை
> ஒன்றுநீயல்லைஅன்றிஒன்றில்லை"

எல்லாம் தானாய், தானே எல்லாமாய் பார்க்கின்ற உயர்நிலை. இதுவே அன்பின் பூர்ணம். இவ்வுயர் நிலையையே, ஸ்ரீ கிருஷ்ணபகவான் உபதேசித்துள்ளார்.

> ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
> அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: ॥

இதன் அர்த்தம்:—சகல தர்மாதர்மங்களையும் (அதாவது) சகல கர்மங்களையும் விட்டு, ஸர்வாத்மாவாயும் சமமாய் ஸர்வபூதங்களிலும் இருக்கிறவனாயும், ஈசுவரனாயும் இருக்கிற என்னை நீயென்று (அதாவது) நீயே அப்படிப்பட்ட பிர்ம்மம் என்றும், என்னைத்தவிர வேறே இல்லையென்றும் நிச்சயம்கொள். இந்நிச்சிய புத்தியுள்ள உன்னை நான் பந்தரூபமான ஸகல கர்மங்களிலிருந்தும் என்னுடைய ஸ்வரூபப்பிரகாசம் செய்விக்கிறதினாலே விடுவிக்கிறேன். ஆகையால் வியசனம் வேண்டாம்.

குறிப்பு:—[இது ஸ்ரீமத்- சங்கராசாரியர் பாஷ்யப்படி மேற்கண்ட மாணிக்கவாசகர் பாசுரத்தை அனுசரித்து நடைபெறுகிறது. ஸ்ரீமத்-இராமாநுஜாசாரியருடைய பாஷ்யம் இதில் வித்தியாசப்படும்.]

ஓம் தத் ஸத்.

**ஆத்மநாதன்.**

# சேனாவரைய வாராய்ச்சி.

ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திற்கு ஆசிரியர் பலருமியற்றிய உரைகளிலெல்லாஞ் சிறந்து விளங்குவது, வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையருரையே என்பது சூத்திரவிருத்தியானினிது விளங்கும். அத்துணைச்சிறப்புவாய்ந்த இவ்வுரையைக் கல்வியவாமேலீட்டால் யான் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக் கலாசாலையில், பண்டித வகுப்பிற் சேர்ந்து ஒருமுறை முழுதும் பாடங்கேட்டுப்பயின்றேன். அதனால், அவ்வுரை, சுருங்கிய சொல்லாற் பொருளினிது விளக்கியும், வடநூன் முடிபுந் தருக்கநெறியுஞ் சத்தநூன் முறையுந் தவறாது தழுவித், தடைவிடைகளான் ஐயமறுத்து, உண்மைப்பொருளை நிறுவியும், அவ்வாறு நிறுவுங்கால் பரதூஷணையின்றியும், செல்லும் பெருமையுடையதென்பது தெற்றென விளங்கிற்று. ஆயினும், அவ்வுரைப்பிரதிகள், இடையிடையே எழுத்துஞ் சொல்லுந் தொடரும் பிறழ்ந்து, பொருட்பொருத்தமின்றி மாறுபட்டுள்ளன. அத்தகைய விடங்களிற் பலவகைக் குறிப்புக்களானும், பிரதிபேதங்களானும் ஊகித்து ஆசிரியருணர்த்த, யானுணர்ந்தவிஷயங்களுட் சிலவருமாறு:—

வினையியல் - சூ. ரு.

"அவைதாம, அம்மா மெம்மே மென்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற வென்னும்
அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே"

"நிறுத்தமுறையானே உயர்திணை வினையாமாறுணர்த்துகின்றார். அவைதாம் இருவகைய; தன்மைவினையும் படர்க்கைவினையுமென. தன்மை வினையும் இருவகைத்து; பன்மைத்தன்மையும் ஒருமைத்தன்மையுமென: தனித்தன்மையும் உளப்பாட்டுத்தன்மையுமெனிருமமையும். இச்சூத்திரத்தாற் பன்மைத்தன்மை யுணர்த்துகின்றார்.

*

"இ-ள். மேன்மூவகைய வெனப்பட்ட வினைச்சொற்றும், அம், ஆம், எம், ஏம் என்னு மீற்றவாகிய சொல்லும், உம்மொடுவரூஉங் கடதறவாகிய கும்மும் டும்மும் தும்மும் றும்மும் என்னு மீற்றவாகிய சொல்லுமென அவ்வெட்டும் பன்மையுணர்த்துந்தன்மைச்சொல்லாம் எ - று."

"தனக்கொருமையல்லதின்மையிற் றன்மைப்பன்மையாவது தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாம். அவ்வுளப்படுத்தன் மூவகைப்படும்; முன்னின்றாரை யுளப்படுத்தலும், படர்க்கையாரை யுளப்படுத்தலும், அவ்விருவரையுமொருங்குளப்படுத்தலுமென."

"அம் ஆம் என்பன முன்னின்றாரை உளப்படுக்கும்; தமராயவழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம் ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுக்கும். உம்மொடுவரூஉங்கடதற அவ்விருவரையும் ஒருங்குளப்படுத்தலுந் தனித்தனியுளப்படுத்தலுமுடைய."

"ஈண்டும் அவைதாமென்பதற்கு முடிபு "அவைதாம் இஉ ஐ ஒ என்புழி உரைத்தாங்குரைக்க."

"அம் ஆம் எம் ஏம் என்பன மூன்று காலமும் பற்றிவரும். உம்மொடு வரூஉங்கடதற எதிர்காலம் பற்றிவரும்."

"முன்னின்ற நான்கீறும் இறந்தகாலம்பற்றிவருங்கால், அம்மும் எம்மும் கடதறவென்னு நான்கன்முன் அன்பெற்றுவரும். ஏம் அன்பெற்றும் பெறாதும் வரும். ஆம் அன்பெறாதுவரும். உ - ம் நக்கனம், நக்கனெம்; உண்டனம், உண்டனெம்; உரைத்தனம், உரைத்தனெம்; தின்றனம், தின்றனெம்; ஏ-ம் நக்கனேம், நக்கேம்; உண்டனேம், உண்டேம்; உரைத்தனேம், உரைத்தேம்; தின்றனேம், தின்றேம்; ஆ-ம். நக்காம், உண்டாம் உரைத்தாம், தின்றாம் எ-ம வரும்" என்பதன்பின்,

"அந்நான் கீறும் வினையெழுத்தின் முன் ஙகாரமும் ழகாரமுமொழித்து இன் பெற்றுவரும். உ-ம் அஞ்சினம், அஞ்சினாம், அஞ்சினெம், அஞ்சினேம்; உரிஞினம், உரிஞினாம், உரிஞினெம், உரிஞி

னேம் எனவரும். பிறவெழுத்தோடு மொட்டிக்கொள்க. கலக்கினம் தெருட்டினம் என்னுந்தொடக்கத்தன குற்றுகரவீறுகலான் அதுவும் ஏனையெழுத்தேயாம்.'' எனவும்,

இவ்வாறே * ககூ-ம் சூத்திரவுரையினும் "அகரம் இறந்தகாலம் பற்றி வருங்கால், கடதறவென்னு நான்கன்முன், அன்பெற்றும் பெறாதும் வரும். ஏனையெழுத்தின்முன் ஙகார ழகார மொழித்து இன் பெற்றுவரும்'' எனவும் பலபதிப்புப் புத்தகங்களினும், இச்சங்கத்துள்ள இரண்டு ஏட்டுப்பிரதியினும் காணப்படுகின்றன.

ஈண்டு ஙகாரழகாரம் ஒழிக்கப்பட்டமைக்குக் காரணத்தை யாராயின்:—ழகாரம் இறந்தகாலம்பற்றி வருங்கால் வாழ்ந்தனம், தவழ்ந்தனம், எனவருதலன்றி வாழினம், தவழினம் என இன் இடைநிலைபெற்று வாராமையின் ஒழிக்கப்பட்டதாம். ஙகாரமும் இன்பெற்று வாராமையான் ஒழிக்கப்பட்டதெனக்கொள்ளின், இன்னும் அது போன்றின்பெற்றுவாராத சகரபகரங்களும் ஒழிக்கப்படவேண்டும். அவ்வாறு சகரபகரங்களை யொழியாது, அவைபோன்ற ஙகரத்தை யொழித்தல் குன்றக்கூறலாமாகையானும், ஈண்டு " ஏனையெழுத்தின் முன்'' எனப் பொதுப்படக் கூறினாரேனும், ஆசிரியர் "ஞணநமனய ரலவழள வென்னும், அப்பதினொன் றே புள்ளியிறுதி'' (பிறப்பியல்-சூ. ௭௫.) எனக்கூறி மொழிக்கீறாகாதென்று விலக்கிய கஙசடதபற வென்னும் ஏழொற்றெழுத்துள் " ஏனையெழுத்தின் முன்'' என்றதனுல் விலக்கப்பட்ட கடதறவென்னும் நான்கொழித்தொழிந்த ஙகர ச

* இச்சூத்திரமும் இதற்கு "அகரம் இறந்தகாலம் பற்றி'' என்னும் வாக்கியம்வரையுள்ள உரையும் வருமாறு:—

அ ஆ வ என வரூஉமிறுதி
யப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

உயர்திணைவினையுணர்த்தி, இனி யஃறிணைவினை புணர்த்துகின்றார்.

இ-ள் அகரமும் ஆகாரமும் வகரவயிர் மெய்யுமாகிய ஈற்றையுடைய அக்கூற்று மூன்றும் அஃறிணைப்பன்மைப்படர்க்கையாம். எ-று.

அகரம் மூன்றுகாலமும் பற்றிவரும். ஆகாரம், எதிர்மறைவினையாய் மூன்றுகாலத்திற்கும் உரித்தாயினும் எதிர்காலத்துப்பயின்றுவரும்.

கர பகரங்களையும், அவை இயல்பாக மொழிக்கீறுகாமையேயன்றி, கடதறவைப் போற்காலங்காட்டுமுறுப்பாகியேனும் வேறுவிதமாக இயைந்தேனும் ஈறுகாமையான் ஒழித்து, எற்புழிக்கோடலான் உயிரையும், ஞணநமனயரலவழளக்களையுமே கொள்ளவேண்டுதலானும், இங்ஙனம்மொழிக்கீறுகாத நகாரத்தை மொழிக்கீறுகிப்பயின்றுவரும் ழகாரத்தோடு சேர்த்து இன்பெறுதென்றொழித்தல் "மலடி மகன், சாத்தனொடுவாரான்" என்பதுபோலுதலானும் "நகரம் ஒழித்து" எனக்கூறவேண்டுவதின்றும். ஆகவே ஈண்டு ழகாரத்தோடொழிக்க வேண்டுமெழுத்து நகாரமன்று; பிறிதொன்றென்பது புலனும்.

இனி, அவ்வெழுத்தியாதென்றுராயின், ஆசிரியர் மொழிக்கீறுமென்ற பதினோரொற்றுள், ஞணநமனயலவள என்னும் ஒன்பதும் முறையே உரிஞினம், பேணினம், பொருநினம், திருமினம், முன்னினம், போயினம், சொல்லினம், வவ்வினம, அள்ளினம் என இன்பெற்று வருதலின் இவற்றுளொன்றன்று. ழகாரம் இன்பெற்று வாராமை முன்னமே காட்டப்பட்டது. எஞ்சியது ரகாரம் ஒன்றே. அதுவும் இறந்தகாலம்பற்றிவருங்கால் ழகாரம்போலவே சேர்ந்தனம், கவர்ந்தனம எனவருதலன்றி, சேரினம் கவரினம் என இடைநிலை இன்பெற்றுவாராமையானும், ஆசிரியர் "ழகாரவிறுதி ரகாரவியற்றே" (புள்ளிமயங்கியல்-சூ ௮௮.) எனவும் "அவற்றுள், ரகாரழகாரங் குற்றொற்றுகா" (மொழிமரபு-சூ. ௧௯.) எனவும் பலவிடத்தும் ரகர ழகரங்களை ஒருசெய்கை பொருவனவாகச்சேர்த்தே கூறுதலானும் ஈண்டும் ழகாரத்தோடொழிக்கவேண்டுவது ரகாரமேயாம்.

ஆகவே இவ்விரண்டிடத்துட் "வினையெழுத்தின்முன் ரகாரமும் ழகாரமுமொழித்து இன் பெற்றுவரும்" என்றுரைப்பதே பொருத்தமுடைத்தென விளங்குகின்றது.

---

விளையியல் சூ-௧௭.

"அன்மையி னின்மையி னுண்மையின் வன்மையி
னன்ன பிறவுங் குறிப்பொடுகொள்ளு
மென்னகிளவியுங் குறிப்பே காலம்"

"இ-ள் அன்மை இன்மை உண்மை வன்மையென்னும் பொருள் பற்றி வருவனவும், அவைபோல்வன பிறவும், குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச்சொல்லுங் காலங்குறிப்பானுணரப்படும். எ-று."

"காலங்குறிப்பானுணரப்படுமெனவே, இவையும் வினைக்குறிப்பாமென்றவாறும். உ-ம்: அல்லன், அல்லள், அல்லர் எ-ம். இலன் இலள், இலர் எ-ம். உளன், உளள், உளர். எ-ம். வல்லன், வல்லள், வல்லர் எ-ம். வரும்."

"பொதுப்படக்கூறியவதனான் பொருளிலன், பொருளிலள், பொருளிலர் என உடைமைக்கு மறுதலையாகிய இன்மையுங் கொள்ளப்படும்."

"இவை ஒருவாய் பாடேபற்றிப் பிறத்தலின் வேறுகூறினார்."

"பண்பொடிவற்றிடை வேற்றுமையென்னையெனின்:—இன்மை போருட்கு மறுதலையாகலின் பொருளின் கட்கிடக்கும் பண்பெனப்படாது. அன்மையும் உண்மையும் பண்பிற்கு மோத்தலிற் பண்பெனப்படா; என்னை? குணத்திற்குக்குணமின்மையின்.வன்மை- ஆற்றல்; அதுவுங்குணத்திற்கு முண்டாகலிற் குணமேனப்படாது. உளதேனின் அதுபண்பாயடங்கும். அதனாற் பொருட்கட்கிடந்து, தனக்கோர் குணமின்றித் தொழிலின்வேறாயகுணத்தின், அன்மை முதலாயின வேறெனப்படும். பண்பெனினுங்குணமெனினும் ஒக்கும். இக்கருத்தே பற்றியன்றே ஆசிரியர் இன்மையு முண்மையு முணர்த்துஞ் சொற்களை முடிப்பாராயிற்றென்பது."

"என்னகிளவியுமென்றது அன்னபிறவு மெனப்பட்டவற்றையேயாகக்கொள்க."

"குறிப்பேகாலம் என்றவழிக்குறிப்பென்றது குறிக்கப்படுவதனை. அன்னபிறவு மென்றதனான் நல்லன், நல்லள், நல்லர்; தீயன், தீயள், தீயர்; உடையன், உடையள், உடையர்; என இத்தொடக்கத்தன எல்லாங்கொள்க." என்பது சூத்திரவுரை.

இச்சூத்திரம் இன்மை முதலிய பொருள் பற்றியும் குறிப்பு வினை நிகழும் என்பதுணர்த்துகின்றது. இதில், அன்மை முதலா யின முற் சூத்திரத்துப்"பண்பினானும்" என்றதில் அடங்காவோ என்னுஞ்சங்கையையுட்கொண்டு "இன்மை பொருட்கு மறுதலையாக லின் பொருளின்கட்கிடக்கும் பண்பெனப்படாது." என, முதற்க ண் இன்மை பண்பன்றென்பது கூறப்பட்டது. இதன் கருத்து—ப ண்பென்பது பண்பியாகிய இயை பிறிதுபொருளைப் பற்றுக்கோடா கப்பற்றி அதன்கணிற்பதன்றே? அங்ஙனம், இன்மையும் தன் இயை பிறிதுபொருளைப் பற்றுக்கோடாகப்பற்றி அதன்கணிருக்குமாயின் பண்பெனல்கூடும். அங்ஙனமன்றித் தன் இயைபிறிதுபொருள் நின்ற நிலைக்களத்து நில்லாது பிறிதினிலைக்களத்து நியதமாய் நிற் கும் இன்மை, பண்பின் இலக்கணம் பெறாமையால் பண்பின்வேறு மென்பது. இது பின்வரும் உதாரணத்தால் விளங்கும்.—"கரியன்" என்பதில் கருமைபண்பு; அதன் பண்பியாகிய இயைபிறிதுபொருள், கரியனாகிய ஆண்மகன்; அவனைப் பற்றுக்கோடாகப்பற்றி அவன் கண் நிற்றலால் கருமை பண்பாயிற்று. இவ்வாறே "செய்யன்" முத லியவற்றினும் செம்மை முதலியன பண்பாதல் கண்டுகொள்க. இனி "இலன்" என்பதில் இன்மை பண்பாயின், அவ்வின்மையின் இயை பிறிது பொருளாகிய இலன் என்னும் ஆண்மகனைப் பற்றுக்கோடா கக்கொண்டு அவன்கண் நிற்றல் வேண்டும். அங்ஙனமன்றி, அவனை யும் அவனிற்கும் நிலைக்களத்தையும் விட்டு, அவனில்லாத பிறிதி னிலைக்களத்தே அவன் இன்மை நியதமாய் நிற்றலான் இன்மை பண் பன்றென்பது.

பின் "அன்மையும் உண்மையும் பண்பிற்கு மொத்தலிற் பண் பெனப்படா; என்னை? குணத்திற்குக் குணமின்மையின்." என்பத னால், அன்மை உண்மைகளும் பண்பல்லவென்பது கூறப்பட்டது. இதன்கருத்து—அன்மையும் உண்மையும் பண்பிக்குரிமையாகிய மூற் கூறிய பண்பிலக்கணம் ஒருவழிப்பெறினும், பிறிதொருவழியால் வெண்மைகருமையன்று, கருமை வெண்மையன்று எ-ம், வெண்மை யுளது, கருமையுளது, எ-ம் (பண்பியையேயன்றி)பண்பினையும் பற்று க்கோடாகக்கொள்ளுதலால் பண்பெனப்படா. பண்பெனக்கொள்ளின்,

அதற்கொருபண்பும், அப்பண்பிற்குமொருபண்பும் கொள்ளப்பட்டு அநவஸ்தை (வரம்பின்றியோடுதல்) என்னுங் குற்றமுடையதாம். ஆதலால் பண்புக்குப் பண்பு கொள்ளுதல் வழக்கன்றென்பது. இவ்வாறே ஆசிரியர் பரிமேலழகரும் "அழுக்காறெனவொருபாவி" என்னுந்திருக்குறளுரையில் "பண்பிற்குப் பண்பில்லையேனும்" என்று கூறியிருத்தல் காண்க.

அதன்பின் "வன்மை ஆற்றல்; அதுவுங்குணத்திற்கு முண்டாகலிற்குணமெனப்படாது" என்பதனால், வன்மையென்பதற்கு ஈண்டுப் பொருள் இன்னதென்பதும், அதுவும் அன்மை உண்மைகளைப்போலவே குணிக்கேயன்றிக் குணத்திற்கு முரித்தாகலிற்குணமன்றென்பதும் கூறப்பட்டன.

இவற்றின்பின் "உளதேனின் அதுபண்பாயடங்கும்."என்ற வாக்கியம் எல்லா அச்சுப்பிரதிகளினும், ஓர் ஏட்டுப்பிரதியினும் காணப்படுகிறது. ஈண்டு "உளதெனின்" என்பதற்குப் பொருள் இன்னதென்று புலப்படவில்லை. அதற்கு உளது என்னும் வினைக்குறிப்பெனின் என்பது பொருளாகக்கொள்ளின், "அது பண்பாயடங்கும்" என்பதனோடியையாமையாற் பொருட்பொருத்தமின்றாம். இனி, ஓரேட்டுப்பிரதியில் "உளறெனின்" என்றிருக்கிறது. இதைக்கொண்டுகிக்குமிடத்து, ஏட்டிற் பெரும்பாலும் ஊறு என்பதற்கும் உளறு என்பதற்கும் வேறுபாடு காணப்படாமையாற் பிற்காலத்தவர் எழுதும்பொழுது "ஊறெனின்" என்பதை உளறெனின் என்று படித்துக்கொண்டு அது தவறென்றும் "உளதெனின்" என்றிருக்க வேண்டுமென்றும் எண்ணி,றகாரத்தைத் தகாரமாக்கிவைக்க, பின் அவ்வாறே அச்சிடப்பட்டதென்று தெரிகிறது. அஃதேல் "ஊறெனின் அதுபண்பாயடங்கும்" என்பதற்குப்பொருளென்னை? எனின்.—ஊறென்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலத்தினிலொன்று. இது, வன்மை மென்மை திண்மை நொய்மை தண்மை வெம்மை இழுமெனல் சருச்சரை என எண்வகைப்படும். இவையெல்லாம் "பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம், அறுசுவை யூறெட்டுயிரல்பொருட்குணம்" என நன்னூலார் கூறியவாறே உயிரல் பொருட்குணத்திலடங்கும். அடங்கவே "வன்மை" என்பதற்கு முற்கூறியவாறு "ஆற்

றல்'' எனப்பொருள் கொள்ளாது பிற்கூறியவாறு ஊறெட்டனுளோ ன்று எனக்கோள்ளின் அவ்வாறுகோண்ட வன்மை பண்பாயடங் கும் என்பது பொருளாம் என்றவாறு. இவற்றால், சாத்தன் கையெழு துமாறுவல்லன் என்புழி வன்மை-ஆற்றல் என்னும் பொருள்பட்டு கஎ-ம் சூத்திரத்துள்ள "வன்மை" என்பதற்குதாரணமாம் என்ப தும், நிலம் வலிது என்புழி வன்மை-எண்வகை ஊறினுளொன்று எனப்பொருள்பட்டு உ௩-ம் சூத்திரத்துள்ள "பண்புகொள்கிளவியு ம்' என்பதற்குதாரணமாம் என்பதும் பெறப்பட்டன.

இதுகாறுங்கூறியவற்றை, மேல் "அதனாற் பொருட்கட்கிடந்து, தனக்கோர்குணமின்றி, தொழிலின் வேறாய குணத்தின், அன்மை முதலாயின வேறெனப்படும." என்று ஆசிரியர்சேனாவரையர் தொ குத்துக்கூறியிருத்தலே வலியுறுத்தும் என்பது.

(இன்னும்வரும்.)

அ. கோபாலையன்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பதவிளக்கம்.

(சுOஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[பழைய ஏட்டினின்று எடுத்தேழுதியது.]

## மூன்றாவது இலைமலிந்தசருக்கம்.

### எறிபத்தநாயனார்புராணம்.

(க) உற்றசெய்கைஉற்றிடத்து - பொருந்தியதொண்டுக்கு இ டையூறுவந்தபோது. ஒல்லைவந்து உதவும் நீரார் - விரைந்துவந்துத வுந்தன்மையையுடையவர்.

(உ) பொன்மலைப்புலிவென்றோங்க - மேருவிலே தனது சின் னமாகிய புலிக்கொடி ஏனைவிற்கொடி கயற்கொடிகளை வென்றுயர,

மலையிடித்துப் போற்றுமங்நெறி - அம்மேருவுக்கு நேராயுள்ள மலைகளையிடித்துச்செய்த அந்தவழி. புதுவழியேயாக - புதுவழியாக. அயல்வழியடைத்த சோழன் - பிறசுற்றுவழிகளை அடைத்த சோழனாகிய. ஓங்கவென்னுமெச்சங்காரியப்பொருட்டு. மேருமலையிலேதனது சின்னமாகிய புலிக்கொடி ஏனைவில்கயலாகிய கொடிகளை வென்று, அவற்றினின்றுயர்ந்தோங்குமாறு, பிறசுற்றுவழிகளையடைத்து மேருவிற்கு நேராயுள்ள மலைகளையிடித்துப்புதுவழியுண்டாக்கிய சோழன் என்பதிதன் கருத்து.

(௩) அமரர் சூழுகின்ற இந்திரனது நகரந்தாழ்வடைய, மதிலில் மஞ்சுபடியும், மாளிகைநிரை யாகாயத்தை அளாவும், சுத்தமான இரத்தினமாலை வாய்தல்களிலேதூங்கும், சோலை பல்வாசனை பரவும், தேன்பொருந்திய மலர்க்கூந்தலிற்சூழ்ந்த(பெண்கள்முகமாகிய)சிலபூரண சந்திரர் வீதியிலுலாவும். மணிகள்பதித்தவாயிலைச்சூழ்ந்த சோலை என்றுமாம்.

(௪) இருளையோட்டுகின்ற மாணிக்கங்கள் பதித்த அரங்கிலாடுகின்ற பெண்களுடைய கூந்தலில் வண்டுகள் வீழும். பரம்பிய ஒளியையுடைய வீதியிலாடுகின்ற கட்டிய கொடிகள் சூரியமண்டலத்துக்குமேலாக அசையும்.

(௫) புரிசைசூழ்ந்து - புரிசையினாலே சூழப்பட்டு. வாழ்வது- வாழப்படுவது.

(எ) முழையரி - முழைஞ்சிலுள்ள சிங்கம்.

(௯) அலரும்பக்குவத்தையுடைய வாசனைகமழ்கின்ற பேரரும்பாகியதிருப்பள்ளித்தாமத்தையுங்கொய்து. பூவைத் திருப்பள்ளித்தாமமென்பது சைவபரிபாஷை.

(கக) இருக்கின்ற அரசராகிய சோழர்களுடைய குலத்தவதரித்தபுகழ்ச்சோழ நாயனாருடைய.

(கஉ) விழவு — அலங்காரம். பரிக்காரர் - குத்துக்கோற்காரர்.

(கௗ) யானை - யானையானது.

(கச) களிறு - களிற்றை. களிற்றைப் பிரசண்டவாயுவைக் கொண்டுபோவார்போலக் கடிதுகொண்டகலப்போக.

(கரு) அணையவொட்டாது - சமீபிக்கமுடியாது. (மேலைப்பதினான்காம்பாட்டில் சண்டக்கால்கொண்டுபோவார்போல - பிரசண்டவாயுவை அடக்கிக்கொண்டுபோவார்போல என்க.) தப்பினர் விழுந்து - தவறிவிழுந்து.

(கசா) மதமயக்கத்தையுடைய யானையினின்றும் உரித்த உரியையுடையவரே. சிவதா என்பதற்குச் சிவனே பூங்கூடையை வாங்கித்தாவென்று கோடலுமொன்று. எளியவருக்கு வலிமையாகும் இறைவரே.

(கஅ) பற்றுக்கோடாகத் திருவடியையடைந்த மார்க்கண்டேயரது மனந் துன்பநீங்க, நேரே தொடர்கின்ற முகிலைப்போல விழுகின்ற யமனுக்குச் சிறிதே நீண்ட திருவடியையுடையவரே. தொடரும்மறலி, வீழ்மறலியெனக்கூட்டுக.

(ககூ) விட்டுணுவுமறியாத நெறியை முற்ற அறியும்படியாக அடிமைத்தொண்டைச் செய்தொழுகுகின்ற அடியார்களில் யானராக வைத்து எண்ணி வருவீர். நெறியென்றதீண்டுப்பாதத்தை. நான் அடியார்களுள் ஒருவனாக எண்ணப்படத்தக்கவனல்லனாகலின், வரமாட்டீர் என்பது கருத்து.

(உ0) எதிரே வருகின்றவராகிய எறிபத்தநாயனார் கேட்டு.

(உக) பிழைத்து - தப்பி.

(உஉ) கிடைத்தல் - எதிர்த்தல்.

(உங) வலத்தில் வீசிக்கொண்டெழுந்து - வீரத்தோடும் வீசிக்கொண்டெழுந்து. காலினால் யானை குலுங்கப்பாய்ந்தார்.

(உச) இவ்வாறெறிபத்தநாயனார் பாய்தலும் விசையைக்கொண்டு செலுத்தும் பாகர்களைத் தன்மீதுகொண்டு கோபித்துச் சுடுகின்ற அக்கினியைக் காலுங்கண்களையுடைய பட்டத்து யானையானது மாறுபட்டு எறிபத்தநாயனார்மீது எதிர்க்க, அச்சமானது தாயினது

தலையன்புபோன்ற "பேரன்புக்கு" முன்னே நிற்குமா, மரித்துப்பாய்ந்து நிலத்திற்றோய்கின்ற தனித்த விசாலமாகிய துதிக்கை விழும்படி நாயனார் வெட்டினார்.

(உ௬) முட்ட - சமீபமாக.

(உஅ) மாறு - பகை. பொங்க நீங்க எனக்கூட்டுக.

(உகூ) படைத்தலைவரும் தம்மரசனிலைமையைக்கண்டு சேனைகளை வந்து சூழ்ந்து விரைந்தெழுமாறு முன்னரே பறைசாற்றுவிக்க, ஆகாயத்தின் பரப்பு முழுமையும் அழகிய வஸ்திரக்கொடிகணிரம்ப, எந்திரத்தையுடைய தேருங்குதிரையும் இடையிடை யானைகளுமாய். உற்று - உற என்றாயிற்று.

(௩0) கொட்புறல் - இடசாரி வலசாரியாகச்சுழலல். களிறுமாகி, பற்றி, கொட்புற்று மழுந்தனர் என முடிக்க.

(௩௧) கட்டி - ஓர் வாத்தியம். பொருகின்ற சைன்னியம் நெருங்கிய அழகோடு ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற முகிலின் ஒலிக்கிளர்ச்சினாணப் பக்கத்தேயெழுந்து படுத்தப்பட்டு நிரம்ப.

(௩உ) தேர்ச்சீர் - தேரொலி. மல்லைக்கார் — ஊழிக்காலத்துமுகில்.

(௩௩) இறுகால்— ஊழிக்காற்று. அரசமர்வீதி - அரசமரும்வீதி. நான்கில் - நான்காக. பரந்தெழுகின்ற சேனைகளெல்லாம்.

(௩௪) பகைப்புலத்தவர் - பகைஞர். வேறான இரண்டு விசாலித்த கையையுடைத்தாய.

(௩௫) வெடிபட - பேரொலியுண்டாக, இடியுமஞ்ச எனினுமமையும்.

(௩௬) நிற்கும் மன்னர் எனக்கூட்டுக.

(௩௭) மழைபோன்ற மதத்தையுடைய யானையதுஞ் சேனையதும். யானைமுதலிய சேனைகளொன்றுமாம. வயவுழைப்புரவியெனமாற்றி வெற்றிக்குறைவிடமான குதிரை மான்க.

(௩௮) வேறென்றும் - இவருக்கு வேறொரு தீமையும். கெட்டேன் என்பது அவலத்தையுணர்த்துவதோர்சொல்: அது இங்கே வினையாய் நின்றது.

(௩௯) செறிந்தவர் - எறிபத்தநாயனாரைச்சூழ்ந்தவர். அவ்விடத்தே கேள்விப்பட்டதொருவண்ணம். குற்றம் - குற்றத்திற்காக.

(௪0) சென்னி - சோழன்.

(௪௧) விலக்காமையால் உயிரொழிந்திறந்தார்.

(௪௨) தீர்வுநேர்வார் - பிராயச்சித்தஞ் செய்தற்குடன்படுவாராய். இது ஆம் என்று - இவ்வாள் தக்கதென்று.

(௪௩) தீங்கு என்றது அவரிறத்தலை.

(௪௭) மாதவர் என்றது இவரிருவரையும்.

(௪௯) கூத்தரருளாற் பூமலரைச் சிந்தவந்துகூடியதென்றெழுந்தது என்க.

(௫௧) மனமானது தருகின்ற களிப்போடும் நித்திரைசெய்து பின் எழுந்ததைப்போல மிகவெவ்விய மதங்கள் பாய்ந்து முகிலைப்போல முழங்கி.

(௫௨) இவ்யானைமேல்கொண்டுவந்த புகழ்ச்சோழநாயனார் இதுபொழுது வெண்குடைநிழலில் யானைமேல்கொண்டுபோனார்—எனக்கூட்டுக.

(௫௪) சிவனது தொண்டைமேற்கொண்டு சிவகாமியாண்டாருஞ்சார. நோக்கல் - சிந்தித்தல். பணி - தொண்டு.

(௫௫) சிவனதுகணங்களுக்கு முதலாய முதன்மையாகிய முதற்றலைமை.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

ஸ்ரீ:

# ஸ்ரீ பட்டர்வைபவம்.

(ருஎஅ - ஆம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ: வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள் எழுதியது.]

அநந்தரம் பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கும் போது, திருவரங்கத்தையும் நம்பெருமாளையும் விட்டுப்பிரிய நேர்ந்ததைக்குறித்து மிகவும் கிலேசித்து *"திடர்விளங்குகரைப்பொன்னிநடுவுபாட்டுத் திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளுங், கடல்விளங்கு கருமேனியம்மான்றன்னைக் கண்ணாரக்கண்டுகக்குங்காது" லினால், முன்பு குலசேகராழ்வார் † "திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளுங், கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டு என் கண்ணிணைகள் என்றுகொலோ களிக்குநாளே" என்றும், ‡ "களிமலர்சேர்பொழிலரங்கத்து உரகமேறிக் கண்வளருங்கடல்வண்ணர் கமலக்கண்ணும், ஒளிமதிசேர்திருமுகமுங் கண்டுகொண்டு என் உள்ளம் மிக என்றுகொலோ உருகுநாளே" என்றும், $ "அணியரங்கத் தரவணையிற்பள்ளிகொள்ளும், நிறந்திகழும் மாயோனைக்கண்டு என் கண்கள் நீர்மல்க என்றுகொலோ நிற்குநாளே" என்றும் அரற்றினாற்போல, 'யான் இனி என்றைக்கு நிர்மலமான காவேரிதீர்த்தத்தில் நீராடிப்பரிசுத்தனாவேனோ? எவ்வகைபிணிப்பையுந்தீர்க்கவல்ல அத்திவ்விய நதியின் தீரத்தில் எப்பொழுது நான்சென்று வசிப்பேனோ? கங்கையிற்புனிதமாய அக்காவிரியாற்றின் பெருந்திடரிலே செம்பொன்மதிளேழுடுத்த திருவரங்கப்பெருங்கோயிலில் பிரணவாகாரவிமாநத்திலே சேஷசயநத்தில் திருமகளும் நிலமகளும் திருவடிவருட வலக்கைகீழ்கொடுத்துப்பள்ளிகொண்டருள்கிற இந்திரநீலமணிவண்ணனை கமலக்கண்ணனை எளியேன் நணுகிக் கண்ணாரக்கண்டு வாயாரவாழ்த்து

---

* பெருமாள் திருமொழி—முதற்றிருப்பதிகம்-கக.
† " " ச.
‡ " " ரு.
¶ " " எ.

வது எங்ஙனேயோ?'' என இவ்வகையான கருத்துக்களமைந்த சிறந்த சில இரங்கற்பாக்களை (வடமொழியிற்)பாடி ஆற்றிக்கொண்டிருந்தனர்.

அங்ஙனம் அங்கு எழுந்தருளியிருக்கிறகாலத்தில் ஒருநாள்,ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் பட்டரை வணங்கி 'நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு திவ்வியப்பிரபந்தங்களுள் முதலதான திருவிருத்தத்திற்குப் பொருள் அருளிச்செய்யவேண்டும்' என்று பிரார்த்திக்க, பட்டர் நஞ்சீயரை நோக்கி 'பெரியகோயிலையும் பெரியபெருமாளையும் விட்டுப்பிரிந்த வருத்தமிகுதியால், எனக்குச்செவிகள் சீப்பாய்கின்றன; வாய்திறந்து வார்த்தைசொல்ல இயல்வதில்லை; ஆகையால், நீர் இவர்க்குத் திருவிருத்தத்தின்பொருள் சொல்லும்'என்று நியமித்து அவரை நஞ்சீயர் பக்கல் காட்டிக்கொடுக்க, சீயரும் அங்ஙனமே அந்தப் பாகவதர்க்குத் திருவிருத்த வியாக்கியானம் அருளிச்செய்யலானார்.

இவ்வாறு நிகழ்கிறகாலத்திலே, கடலைக்கலக்கினாற்போலப் பட்டர் திருவுள்ளத்தைக்கலக்கிப் பாகவதவிரோதஞ் செய்தவனான வீரசுந்தரன் இறந்துபோக, அச்செய்தியையறிந்தவர் பலர் பகவதபசாரத்திலும் பாகவதாபசாரம் கொடியதென்று கூறலாயினர். பட்டர் சிஷ்யர்களிற் சிலர் 'பட்டருடைய பகைவன் பட்டான்' என்று மகிழ்ந்து ஆரவாரித்து அவர் திருத்தாயாரான ஆண்டாள் பக்கல் சென்று செய்திசொல்ல, அது கேட்டவுடன் ஆண்டாள் திருவுள்ளங் கலங்கித் தம் திருமாளிகையினுள்ளே புகுந்து கதவைச்சார்த்திக்கொண்டு வயிறுபிடித்து வாய்விட்டுப்பெருங்குரலாகக் கதறியழத்தொடங்கினள். குதூகலங்கொண்டு கூத்தாடுகிற அடியார்கள் அதனைக் கண்டு 'இது என்?' என்று சங்கித்து ஆண்டாளைநோக்கி 'பட்டரை இங்கு இருக்கவொட்டாமல் நலிந்தபாவி போனானென்பதுபற்றி மகிழாது அதுகுறித்துப் புலம்புவானேன்? பட்டருடைய பகைவன் ஒழிவதும், அவர் இங்கு மீண்டு எழுந்தருள்வதும், நாங்களனைவரும் கூடிவாழ்வதும் உமக்குப்பிரியமில்லையோ?' என்று வினவினார்கள். அதற்கு ஆண்டாள் 'பிள்ளைகாள்! நீங்கள் ஒன்றும் அறிகிறீர்களில்லை; வீரசுந்தரன் நேரே ஆழ்வானுடைய சிஷ்யனாயிருந்தும், அவர்க்கு அந்தரங்கசிஷ்யரான பிள்ளைப்பிள்ளையாழ்வான் பக்கல் அபசார

ப்பட்டு ஆசாரியபுத்திரரான பட்டரைத்திண்டாட்டங்கண்டு அவர் திறத்திலே மிகவும் அபராதம்பண்ணிப் பின்பாவது 'அறியாமற்செய்தேன், பொறுத்தருளவேணும்' என்று அவர் பாதத்தில் விழுந்து வணங்குவதுஞ்செய்யாமலே 'இப்படிச் செய்தோமே' என்கிற அநுதாபமுமில்லாமலே மாண்டுபோனான்; ஆதலால், அவனுயிர் உடலை விட்டபோதே யமதூதர்கையிலகப்பட்டுக்கலங்கி அடியுண்டு மிகவருந்தும்; பகவத்கைங்கர்யஞ் செய்கிறவரும் பாகவதாபசாரப்படுவராயின், அவருடைய ஆத்மா ஈடேறுதன்றோ? ஆதலால், அவன் மறுமையின்பத்தை யிழந்தான்; இன்னும் சிலநாள் இவ்வுலகத்திலிருந்து இம்மையின்பத்தையாவது அநுபவிப்பனென்றிருந்தேன்; அதனையும் இழந்துவிட்டானே; ஆழ்வான்திருவடிச்சம்பந்தமுடையதோர் ஆத்மா இப்படி இருமையையும் இழந்து சீர்கெடுவதே! என்பதை நினைத்து என்வயிறு எரிகிறவகை உங்களொருவர்க்கும் தெரிகிறதில்லை' என்று சொன்னாள். இப்படி தீமைசெய்தவர் பக்கலிலும் நன்மையை நாடியிரங்குமியல்புடையவர், ஆழ்வான்தேவிகளான ஆண்டாள்.

வீரசுந்தரனிறந்ததைக்கேள்வியுற்ற பிள்ளைப்பிள்ளையாழ்வான் உடனே கோயிலினின்று திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளி நடந்த செய்தியைச்சொல்ல, அதுகேட்டவளவிலே, பட்டர், பாகவதவிரோதி தொலைந்தானென்று மகிழ்ச்சியுறக்கடவராயினும் அதுசெய்யாது, பிராட்டி பக்கல் பேரபராதத்தைச்செய்த இராவணன் இறந்தபின்பு பெருமாள் பேராற்றலையுடையனை அத்தசமுகன் தம்பியான விபீஷணன்போன்று தன்னைச்சரணமடைந்து உய்ந்தானில்லையே யென்பதைக்குறித்துத் திருவுள்ளமிரங்கினாற்போல, வீரசுந்தரன் பின்னர் அபராதக்ஷாமணஞ்செய்துகொண்டு நற்கதிபெறாது போயினனேயென்று சிந்தித்து, திருக்கோட்டியூரிலிருந்து புறப்பட்டு ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளிப் பெருமாளைச் சேவித்து மனக்குறைதீர்ந்து முன்போலவே தரிசனத்தை நிர்வகித்துக்கொண்டிருந்தனர்.

ஒருநாள், பட்டர் பெரியபெருமாளைச் சேவித்துநின்றபோது, அத்திருவரங்கநாதன் அவரைக்கடாக்ஷித்து 'நம் உடையவர் ஸ்ரீபா

ஷ்யமும் கீதாபாஷ்யமும் செய்தருளினர்; நீர் ஸஹஸ்ரநாமத்துக்குப்பாஷ்யம் செய்யும்' என்று நியமிக்க, பட்டர் அந்த பகவதாஜ்ஞையைச்சிரமேற்கொண்டு வெகு சிறப்பாக ஸஹஸ்ரநாமபாஷ்யம் செய்தருளினூர்.

மற்றும், பட்டர், ஸ்ரீபாஷ்யகாரர்க்குப்பின்புள்ளாராய் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்திற்குப் பிரவர்த்தகரான பூர்வாசாரியர்களெல்லார்க்கும் தாம் ஆசார்யராகையால், அஷ்டாக்ஷரமென்னும் பெரியதிருமந்திரத்துக்கு விவரணமாக அஷ்டசுலோகீ என்ற வடநூலை அருளிச்செய்தனர். பின்புள்ள ஆசார்யர்களநேகர் செய்த மந்திரவியாக்கியானங்களனைத்திற்கும் இது முன்னூலாயிருக்கும்.

தத்வரத்நாகரம், பிரணவவிவரணம், ஸ்ரீகுணரத்நகோசம், ஸ்ரீரங்கராஜஸ்தவம், க்ரியாதீபம், தத்வத்ரயச்லோகம் முதலாக இவர் செய்தருளிய வடநூல்கள் பலவுண்டு.

எம்பெருமானுடைய திருக்கலியாணகுணங்களைக்குறித்து நம்மாழ்வார் திருவாய்மொழியென்னுந் திவ்வியபிரபந்தத்தை அருளிச்செய்ததிலும், எம்பெருமானூர் அதன்பொருளை அடியார்கட்கெல்லாம் வெளியிட்டும் வெளியிடுவித்தும் அதனைப்பாதுகாத்த செயலிலும் ஈடுபட்டு, பட்டர், 'நம்பெருமாள் விஷயமான திருவாய்மொழியாகிய அருமைக்குழந்தையைப்பெற்ற நற்றாய், நம்மாழ்வார்; அதனை அன்போடு குறிக்கொண்டுகாத்துப் போற்றிவளர்த்த செவிலித்தாய், எம்பெருமானூர்' என்னுங்கருத்து அமைய,

* "வான்திகழுஞ்சோலைமதிளரங்கர்வண்புகழ்மேல்
ஆன்றதமிழ்மறைகளாயிரமும்—ஈன்ற
முதற்றாய்சடகோபன்மொய்ம்பால்வளர்த்த
இதத்தாய்இராமாநுசன்."

என்ற பாசுரத்தையும்,

அத்திருவாய்மொழிப்பிரபந்தத்திலே பரப்ரஹ்மஸ்வரூபம் முதலாக அறியவேண்டிய அர்த்தங்களெல்லாம் விளங்க உரைக்கப்பட்டுள்ள திறத்தில் ஈடுபட்டு அத்திருவாய்மொழியின் ஏற்றம் விளங்க,

---

* திருவாய்மொழியின் தனியன்.

* "மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியுந் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்"

என்ற பாசுரத்தையும் அருளிச்செய்தனர்.

ஒருநாள், நம்பெருமாள் திருமஞ்சநங்கண்டருள்கிறபோது, அடியார்களெல்லாரும் சேவித்து நிற்கையில், அனைவரும் பட்டரை நோக்கி 'பெருமாள் நீராடி ஈரவாடையும் திருத்துழாய்மாலையுமாக எழுந்தருளியிருக்கிற இக்காட்சியைக்குறித்து ஓர் உத்ப்ரேக்ஷை சொல்லவேண்டும்' என்று பிரார்த்திக்க, உடனே பட்டர் சொற்செறிவு பொருட்பொலிவு ஆழ்ந்தகருத்து முதலிய சிறப்புக்களெல்லாம் அமைய ஆசுகவியாக † ஒரு சுலோகம் விண்ணப்பஞ்செய்தனர்; அதன்பொருள் வருமாறு:— பரமாத்மா ஜீவாத்மாவை நோக்கி 'நீ எனக்கு உரியை' என்பன்; அதனைமறுத்து ஜீவாத்மா 'நான் எனக்கு உரியேன் [அதாவது - உனக்குப்பரதந்திரனல்லேன், ஸ்வதந்திரன்]' என்பன்; பரமாத்மா 'உனக்கு அது எப்படி?' என்ன, ஜீவாத்மா 'உனக்கும் அது எப்படி?' என்பன்; 'வேதம் முதலிய பிரமாணங்களினால் அங்ஙனமாகிறது' என்று பரமாத்மாசொல்ல, 'தொன்றுதொட்டுவருகிற அநுபவத்தினாலே இங்ஙனமாகிறது' என்று ஜீவாத்மா எதிர்சொல்வன்; 'ஆனால், அந்த அநுபவம் இடையிடையே ஆக்ஷேபிக்கப்பட்டுள்ளதே' என்று பரமாத்மா வியவகாரம்பேச, 'எவ்விடத்தில் யாருடைய ஆக்ஷேபம்?' என்று ஜீவாத்மா வினவும்; அதற்குப்பரமாத்மா 'கீதை முதலிய நூல்களில் என்தொ

---

* திருவாய்மொழியின் தனியன்.

† [illegible] • முக்தகம்

---

‡ [illegible] ॥

*

டர்பு பிரசித்தமன்றோ?' என்ன, மற்றும் ஜீவாத்மா 'இதற்குச்சாக்ஷி யார்?' என்று வழக்கு உரைப்பன்; 'நல்லறிவுடையவன் சாக்ஷி' என்று பரமாத்மா சொல்ல, ஜீவாத்மா 'அந்தோ! அவன் நின்பக்கல் பக்ஷபாதமுடையவன்' என்று குறைகூறுவான்; இங்ஙனம் ஜீவாத்மா நிகழ்த்தும் வியவகாரத்திலே பரமாத்மாவான நீ பிரமாணஞ்செய்யச்சித்தனாயிருப்பவன்போல விளங்குகின்றாய் . என்று நம்பெருமாளைநோக்கிக்கூறியவாறும். (இது சுருக்கம்; பெருக்கம், வல்லார்வாய்க்கேட்டுணரற்பாலது.)

பிற்காலத்திலே பிரதிவாதிபயங்கர அண்ணனென்ற ஆசிரியர், ஸ்ரீவேதாந்ததேசிகன் விஷயமாகச்செய்த ஸப்ததிரத்நமாலிகா என்னும் வடநூலிலே, கவிதார்க்கிக ஸிம்ஹமென்று விருதுபெற்ற ஸ்ரீவேதாந்த தேசிகனுடைய ஸம்ஸ்கிருத கவந சக்தியைச்சிறப்பித்துக்கூறுமிடத்து, * 'அவர் வடமொழிக்கவித்திறத்தில், சிறப்பினால், கூரத்தாழ்வான் குமாரரான பட்டரை அநுசரிப்பர்' என்று அவர் கவித்திறத்துக்குப் பட்டர்கவித்திறத்தை உவமை கூறினரென்றால், இதனினும் மேலாகப் பட்டர் கவித்திறத்தைப்பற்றிச் சொல்லவேண்டுவதுமுண்டோ?

ஒருகாலத்திலே போசளதேசத்தவரான அம்மணியாழ்வானென்பவர் பட்டர்வைபவத்தைக் கேள்வியுற்றுத் தாம் உய்வுபெறும் வழியை அவர்பக்கல் கேட்டுணர அவாக்கொண்டு பல காதவழி கடந்து ஸ்ரீரங்கத்துக்கு வந்து பட்டர் திருவடிகளிலே தண்டன் சமர்ப்பித்து 'அடியேனுக்குத்தஞ்சமாயிருப்பதோர் அர்த்தத்தை அருளிச்செய்யவேண்டும்' என்று விஜ்ஞாபிக்க, பட்டர் திருவாய்மொழியிலே பாகவதர்க்கு அடிமை பூணுதலின் சிறப்பையுணர்த்துகிற "நெடுமாற்கடிமை" † என்ற திருப்பதிகமுழுவதுக்கும் பொருள் அருளிச்செய்து 'எம்பெருமான் மகிமையை எவ்வளவு அறிந்தாலும் அது அவனைப் பாதியளவே அறிந்ததாம்; அவனடியார்களின்

* ஸப்ததிரத்நமாலிகா ௧௧.

ஸம்ஸ்க்ருதகவிதாயாம் ப்ரௌடிம்நா ப்ரத்ருதி கூரநாதஸ்ய ஸூநோ: ।
த்ராவிடகவிதாயாம் ப்ரௌடிமாவாப்ய ஸூக்திஸாரம் வா ॥

† என்பதாந்திருப்பதிகம்.

மகிமையுணர்ந்தாலே அவனை முழுவதும் அறிந்ததாகிறது' என்று அருளிச்செய்ய, அவர் 'பலபடிசொல்லில் என்? மறந்துவிடுவேன்; இவ்வளவே அமையும்' என்று அதனையே கடைப்பிடித்துச்சென்று அங்ஙனந்திருமாலடியார்க்கு அடிமைசெய்தலையே உரியதொழிலாகக்கொண்டு உய்வுபெற்றார்.

(இன்னும் வரும்.)

---

ஸ்ரீ

# பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.

:o:

(௬௨௨-ஆம் பக்கத்தொடர்ச்சி).

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் 154-கீழுதவிப்பரீக்ஷாதிகாரிகளைக் கொண்டே இத்தனைபாடசாலைகளையும் பரீக்ஷிப்பது அஸாத்தியமல்லவா? ஆகையால், த்விதீயவித்தியாப்பியாஸ பாடசாலை உபாத்தியாயர்களையும் பரீக்ஷகர்களாகச் சேர்த்துக்கொண்டு, அவர்களுடைய சிரமத்திற்குத் தக்கபடி சம்மானம் கொடுக்கும்படி சில விதிகள் ஏற்படுத்தினால், பரீக்ஷை வெகுநன்றாக நடந்து பிள்ளைகள் தேர்ச்சி பெறுவார்களன்றோ?

3. இப்போதுள்ள பிரதம வித்தியாப்பியாஸ பாடசாலை உபாத்தியாயர்கள் போதுமான திறமை உள்ளவர்களாயிராமையால், அவர்களுக்குப்பிரதியாக, (1) அங்கீகரிக்கப்பட்ட உயர்ந்த வகுப்பு ஸம்ஸ்கிருத பாடசாலைகளில் படித்துத்தேறின வித்தியார்த்திகளும், (2) மதுரைத்தமிழ்ச்சங்கத்துப்பரீக்ஷையில் தேறின வித்தியார்த்திகளும் (3) மற்றும் பலசபையாராலும் சுதேச இராஜாக்களாலும் சிறந்த பாண்டித்திய முள்ளவர்களென்று சம்மானம் கொடுக்கப்பட்ட வித்தியார்த்திகளும் சொற்பகாலம் இராஜாங்கத்துப் போதனாப்பியாஸ பாடசாலைகளில் பழகினால் சிறந்த உபாத்தியாயர்கள் ஆகலாமல்லவா?

விடை. (a) அவ்வளவு படித்தபண்டிதர்கள் இப்படிப்பட்ட கீழ்த்தரமான பாடசாலைகளுக்கு உபாத்தியாயராக சம்மதிப்பார்களா? என்பது சிலருடைய ஆக்ஷேபம்; (b) அப்படிப்பட்ட பண்டிதர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பது பின்னும் சிலருடைய ஆக்ஷேபம்; (c) அப்படிப்பட்டவர்கள் போதனாப்பியாஸ பாடசாலைகளில் பழகவருவார்களா? என்பது வேறு சிலருடைய சந்தேகம்.

தம்முடைய சொந்தக்கிராமத்திலேயே நல்ல போதுபோக்காகப்பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதும், அதற்குத்தக்கபடி தமக்கு ஜீவனோபாயமும் கிடைத்தால், யார்தாம் சம்மதிக்கமாட்டார்கள்?

இவ்விதமான பண்டிதர்கள் ஆயிரக்கணக்காகவிருக்கிறார்கள். மேலும், தற்காலத்திலுள்ள 230-ஸம்ஸ்கிருதபாடசாலைகளிலும் 3,350 வித்தியார்த்திகள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். கல்கத்தா அலஹாபாத்து இவ்விடங்களில் ஏற்பட்டிருப்பதுபோல் இச்சென்னை ராஜதானியிலும் கலாசாலைப் பரீக்ஷை ஏற்படும் பக்ஷத்தில் அப்பண்டிதர்கள் பரீக்ஷைகொடுத்து யோக்கியதாபத்திரிகை பெறக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்காகத் தனிப்பரீக்ஷையும் தனிப்பத்திரிகையும் வேண்டுவதில்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சாஸ்திரத்தேர்ச்சிப் பரீக்ஷை (பி. ஏ.) சாஸ்திரபாண்டித்திய பரீக்ஷை (எம். ஏ.) இவைகளில் சுதேச பாஷைகளுக்குத் தனியே கேள்விப்பத்திரிகை ஏற்பட்டிருக்கிறதாகையால், அவற்றில் அவர்களையும் சேர்த்துவிடலாம். இப்படிச்செய்யவேண்டுமென்று முன்னமே ஒருதரம் முயற்சி நடந்தது; அது அப்போது நிறைவேறவில்லை. இப்போது கலாசாலை விதிகளைப் புதுப்பிக்கத்தொடங்கியிருப்பதால், பண்டித பரீக்ஷையும் கலாசாலையில் ஒரு பாகமாயிருக்க யோசிப்பதற்கு இதுவே ஏற்றதருணமாம்.

இந்தக் கலாசாலைப் பரீக்ஷையில் இவர்களைச்சேர்க்க சாத்தியப்படாவிட்டாலும், இவர்களுக்காக ஒரு தனிப்பரீக்ஷை ஏற்படுத்தி யோக்கியதாபத்திரிகை கொடுக்க முயற்சியெடுத்துக்கொண்டால், வித்தியாபிவிருத்தி விசேஷமாய் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

4. இத்தேசத்தில் இப்போது வழங்கிவரும் படிப்பு முறையோடு இத்தேசத்துப் பூர்வகாலத்துப் படிப்புமுறையையும் சேர்த்துப் படிப்பிக்கமுடியுமா? முடியுமானால் எவ்வளவு வரையில் முடியும்?

விடை. இத்தேசத்துப் பூர்வகாலத்துப்படிப்பில் ஸாரமானது ஒன்றுமில்லை; ஆகையால் முடியாது என்று சிலர் ஆக்ஷேபிக்கிறார்கள்.

பாஷையும் கணிதமும் கற்க இத்தேசத்துப்பழைய முறையே சிறந்தது. மற்ற விஷயங்களைக் கிராமத்தார் தாமே சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாமென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கேம்பிரிட்ஜ்கலாசாலையார் இத்தேசத்தில் அங்கங்கே பலவிடங்களிலும் பிள்ளைகளைப் பரீக்ஷித்து யோக்கியதாபத்திரிகை கொடுக்க ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். அந்தப்பரீட்சைக்கு அவர்களுடைய மதவிஷயமும் பாஷையும் கணிதமுமாகிய மூன்றுமே முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றன. அம்மூன்றிலும் மதவிஷயத்தையே முக்கியமாகக்கொண்டிருக்கிறார்கள். இத்தேசத்தில் மதங்கள் பலவாயிருப்பதைப்பற்றி மதவிஷயத்தைப் பாடசாலைகளில் கற்பிப்பது அசாத்தியமாயிருந்தாலும், முன்னே சொல்லியபடி ஸ்தோத்திரங்களை அர்த்தத்துடன் பாடம் பண்ணும் வழியைக்காட்டிவிட்டால், பிற்காலத்தில் நல்லபாஷா ஞானத்துடன் மதவிஷயத்தையும் எளிதில் தெரிந்துகொள்ளலாகுமே.

5. கைத்தொழிற் கல்வியை விருத்திசெய்ய மேல்விசாரிச்சட்டபாய்ப் பார்த்துக் கொள்வதற்கு, கைத்தொழில் திறமையைக்காட்டுகிற சிறந்த சிற்பசித்திரசாமான்களையும், கிண்டர்கார்ட்டன் என்கிற விளையாட்டுக் கல்வியைக் கற்பிப்பதற்கு வேண்டிய கருவிகளையும் சேர்த்துவைப்பதற்காக ஒவ்வொரு முனிஸிபாலிடி நகரத்திலும் ஒவ்வொரு யூனியன் கிராமத்திலும் ஏற்றதான கட்டடமொன்று கட்டித் தோட்டமுமொன்று அமைக்கவும், இராஜாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் சிறுவர்க்கு மாத்திரமேயன்றிப் பெரியோர்களுக்கு முபயோகமாகும்படி ரசாயனப்பொருள்

களும், பதார்த்த தத்துவசாஸ்திரக் கருவிகளும் சேர்த்துவைக்கச் சிறுகட்டிடமொன்று கட்டுவிக்கவும், முனிஸிபாலிட்டியாரும் லோகல்பண்டு சபையாரும் விரும்பிச்செய்யும் திரவியசகாயத்தை ஆதாரமாகக் கொண்டு நாம் வேண்டியபணம் சேர்க்க முடியாதா?

விடை. அப்படிச்செய்ய முடியுமென்றும், அப்படிச் செய்ய வேண்டியது அவசியமென்றும், யாவரும் ஒரே அபிப்பிராயமாய் சம்மதித்திருக்கிறார்கள்.

இப்படிச்செய்தால், பாடசாலைப் பிள்ளைகள் தவிர மற்றவர்களும் தத்தம் தொழிலுக்கு ஏற்றபடி படிக்க அனுகூலமுண்டாகும். இதரதேசங்களில் அப்படிப்பட்ட பாடசாலைகள் பெரியோர்களுக்கும் படிக்க ஏற்பட்டிருக்கின்றன; நமது தேசத்தில் அப்படிப்பட்டவைகள் இல்லையே.

6. பிரதமவித்தியாப்பியாஸ பாடசாலைப்பிள்ளைகளில் பெரும்பான்மையோர் பிற்காலத்தில் பயிர்த்தொழிலையே தமக்கு ஜீவனோபாயமாக வைத்துக்கொள்வதாயிருக்குமானகையால், அதற்குத்தக்கபடி பிரதமவித்தியாப்பியாஸ பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஏற்றதான படிப்புச்சட்டமும் படிப்புமுறையும் எப்படிப்பட்டவையாம்?

விடை. இதற்கு அபிப்பிராயம் ஒருமுகமாக இல்லை. சிலர் சிறுவர்களுக்கு ஒரே தன்மையான படிப்பு முறை இருக்கவேண்டுமென்றும், மற்றும் சிலர் கிராமத்துப் பாடசாலைப் படிப்புமுறை வேறாக இருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இங்கிலாந்திலே பயிரிடும் நிலம் மிகவும் சொற்பமாயிருந்தாலும், பயிர்த்தொழில் கற்பிக்கும் பாடசாலைகளும், பத்திரிகைகளும் புஸ்தகங்களும், விசேஷமாக ஏற்பட்டிருக்கின்றன. நமது தேசத்தில் 100-க்கு 85 பேர் பயிர்த்தொழிலாலேயே ஜீவிக்கவேண்டியவர்களாயிருந்தாலும், அவர்களுக்கு ஒருவிதமான உதவியும் ஏற்படாமலிருப்பது மிகப்பரிதாபமே. இதுவிஷயமாக பீச்சம் துரையவர்கள் விக்டோரியாடேக்னிகல் இன்ஸ்டிட்யூட்டின் ஸகாயத்தைக் கொண்டு பெருமுயற்சி செய்து வருகின்றார்.

பயிர்த்தொழிற் பாடசாலைகள் இத்தேசத்தில் வெகுநாளாய் ஏற்பட்டிருந்தும், அவைகளில் ஆங்கிலேயபாஷை யாலேயே படிப்பிக்கப்படுவதனால், அவை நாட்டாருக்கு உபயோகப்படாமலிருக்கின்றன. அவைகளில் படித்துத் தேறினவர்கள் உத்தியோகத்தில் பிரவேசித்து அதேகாரியமா யிருந்துவிடுகிறார்கள்.

(இன்னும் வரும்.)

சே இராஜகோபாலாசாரி.

---

உ

# நல்லொழுக்கம்.

---

(௬௪௫-ம் பக்கத்தொடர்ச்சி.)

[ஸ்ரீ: இலக்ஷுமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

வெகுகாலத்திற்குப் பிற்பாடு ஆரிஸ்கெப்பர் தான் பாட்டனானபொழுது தன் தாயாருடைய புத்திமதியை அன்புடன் ஞாபகப்படுத்தி அதைத் தன்மக்களுக்குத் திருப்பிச்சொன்னார். இவ்வாறு நல்ல திருஷ்டாந்தத்தின் முக்கியசக்தியானது உலகத்தை என்றும் புதுமையும் இளமையுமாகவைத்துக்கொண்டு சந்ததிபரம்பரையாக வசிக்கின்றது. 1846 ம் வருஷத்தில் மேடம்பயோலின் என்னும் தன் புத்திரிக்கு எழுதுகையில், காலஞ்சென்ற தன் தாயின் புத்திமதி அவனுக்கு ஞாபகப்பட்டது. அவன் சொன்னதாவது:—'வேண்டும்' என்கிறவார்த்தையை, அருமைக்குழந்தாய்! நன்றாய் உன் ஞாபகத்தில் குறித்துக்கொள். உன்பாட்டி அதைவிட்டு நீங்கியிருந்தது அருமை. நம்முடைய கைகளின் தொழிலாலாவது அல்லது ஒருவனுடைய தன்னயமறுத்தலின் முயற்சியாலாவது சம்பாதிக்கப்பட்டதைத் தவிர வேறொன்றும் நன்மையான பயனை நம்முடைய ஆயுட் காலத்தில் உண்டாக்குகிறதில்லை யென்பது உண்மை. சுருங்கச்சொல்லின், நாம் ஏதாவது சௌக்கியத்தையும் இன்பத்தையும் அடைய விரும்பினால் தன்னயம் வெறுத்தலானது எப்பொழுதும் பழக்கப்படவே.

ண்டும். நான் இனி வாலிபனாகுதலில்லை. என் ஆயுட்காலத்தில் தன்னய வெறுப்பால் அல்லது என்னுடைய போக போக்கியங்களில் வெறுப்பால் விளைந்த திருப்திகரத்தைப்போல எனக்கு மிகுந்த திருப்தியானது வேறொன்றிலுமில்லை என்று உறுதிகூறுகிறேன். (The forbidden) விலக்கப்பட்டதென்பது ஒரு ஞானியின் நீதிமொழியாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து நமக்கு முன் மாதிரியாக நடந்து காட்டியது தன்னயமறுத்தலென்னும் குணத்தையேயாம்.

"பிரஞ்சு சரித்திரக்காரர் மிக்கெல்ட் என்பவர் அவரது வெகு ஞானப்பிரியமான புஸ்தகங்களிலொன்றும், அது வெளிப்பட்ட காலத்தில் வெறுப்பான ஆட்சேபணைக்கு இடமாயிருந்ததுமான புஸ்தகத்தின் முகவுரையில் தன் தாயைப்பற்றி உருக்கமாய்ச் சொல்வது' பின்வருமாறு:—

"நான் இதையெல்லாம் எழுதிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு ஸ்திரீயை என் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். அவளுடைய வலிமையும் உண்மையுமான மனசானது இந்தத்தர்க்கங்களிலென்னை ஆதரிக்கத் தவறியிருக்கமாட்டாது. அவளை என்னுடைய குழந்தைப்பருவத்திலேயே 30வருஷங்களுக்கு முன் நான் இழந்து விட்டேன். அப்படிக்கிருந்தும் எப்பொழுதும் என் ஞாபகத்திலே அவள் இருந்துகொண்டு வயசுதோறும் என்னைத்தொடர்ந்து வருகிறாள்.

"என் தரித்திரகாலத்தில் அவள் என்னுடன் பாடுபட்டாள். என் நல்ல அதிர்ஷ்டத்தை அனுபவிக்க அவளுக்குக் கொடுத்துவைக்கவில்லை. இளமையாயிருக்கும்பொழுது நான் அவளை துக்கப்படுத்தினேன். இப்பொழுது அவளை ஆறுதல் செய்ய ஒன்றுங்கூடவில்லை. அவளுடைய எலும்புகளிருக்குமிடங்கூட எனக்குத் தெரியவில்லை. அவளைப்புதைக்கிறதற்கு நிலம்வாங்க அக்காலத்தில் மிக ஏழையாயிருந்தேன்.

"ஆயினும் அவளுக்கு நான் மெத்தக்கடன்பட்டிருக்கிறேன். ஸ்திரீகளுக்கு மகனாகப்பிறந்தவன் நான்தானென்று ஆழ உணருகிறேன். என் அங்கலட்சணமும் அங்கசேஷ்டையுபோசொல்லத்தேவையில்லை. என் கருத்துகளிலும் வார்த்தைகளிலும் ஒவ்வொரு நிமிஷமும் என்

தாயாரை என்னிடத்தில் திருப்பக்காண்கிறேன். சென்ற காலங்களுக்காக நான் உணருகிற பரிதாபமும் காலஞ்சென்று போனவர்களெல்லாரையும் பற்றிய உருக்கமான ஞாபகமும் எனக்குண்டாயிருப்பது என் தாயாரின் இரத்தத்தாலேதான்.

"முதிர்ந்த வயசைநோக்கிச் செல்லுகிற நான் தனியே அவளுக்குக் கடன்பட்டிருக்கிற அனேககாரியங்களுக்கு பிரதிபலனாக அவளுக்கு என்னசெய்யக்கூடும்? ஸ்திரீகள் பக்கமாகவும் தாய்மார்கள் பக்கமாகவும் நான் ஆதரித்துப்பேசுகிற இந்த விஷயத்திற்காக அவள் எனக்கு வந்தனஞ் செய்திருப்பாள்"

ஆனால், தாயானவள் தன்புத்திரனுடைய கவன சாமர்த்தியம் அல்லது சிற்பசாமர்த்தியமுள்ள அறிவை நல்லவிஷயத்திற்கு, மிக வசவர்த்திசெய்வதுபோலத் தீமைக்கும் வசப்படும்படிசெய்யலாம். இவ்வாறு தன்போக்கானகருத்துக்கள், கட்டுக்கடங்காமை, அருவருப்பான பகைமை, முற்கோபம் ஆகிய குணங்கள் லார்ட்பைரனிடம் உண்டாயதுக்கு, பெரும்பாலும் அவர்பிறந்ததுமுதல், சுவேச்சாசஞ்சாரமும், முரட்டுத்தனமும், கோபகுணமும் உள்ள அவர் தாயாரால் அவருடைய மனசில் அழுந்தச்செய்ததே காரணம் எனஊகிக்கற்பாலது. அவள் தன் குமாரனுடைய அங்கஹீனத்தைப்பற்றியும் நிந்திப்பாள். அவ்விருவர்க்குள்ளும் அடிக்கடி நடந்த உக்கிரமான சண்டைகளில் அவர்ஓடஓடப்பற்றுக்குறடுகளையெடுத்துப்பின்னே தொடர்ந்துவீசுவாள். இயற்கைக்கு விரோதமான இந்த நடப்புத்தான் அவரதுபிற்காலத்தில் அவருக்கு அசௌக்கியமான மனோசுபாவத்தைக் கொடுத்தது. கவலையாற் கரைந்தும், களிப்பற்றும், பெருமையற்றும், ஆனால் துர்பலமுற்றும் இருந்து தன் சைசவத்தில் தன்தாயார்பால் கிரஹித்தவிஷப்பாலைத் தன்னுடனே வகித்துக்கொண்டனர். அவருடைய 'சைல்ட்ஹெரோல்ட்'ல் அவர்முறையிடுவதாவது:—"ஆயினும் சுருங்கநினைத்தல் வேண்டும். நான் நீளநினைந்து, இருளடிக்கவே, என் மூளை கிறுகிறுத்துக்கொதித்து, சுழிப்புற்ற தோற்றத்தையும் ஜ்வாலையையும் சிருஷ்டித்தது. இவ்வாறு இளமையில் என் இருதயத்தைச்சாந்தமாக்கப் பழக்காததால் என் வாழ்நாள் என்னும் ஊற்றானது விஷமுற்றதாயிற்று"

*

அவ்வாறே, மற்றொருவிதத்தில், நாடகனுடைய தாயாராகிய மிஸ்டிரஸ் பூட் உடைய ஒழுக்கமானது அவளுடைய சந்தோஷமும் களிப்புற்றதுமான இருதயமுள்ள மகனுடைய நடக்கையில் விசித்திரமாய்ப் புலப்படுகின்றது. அவள் மிகுந்த பூர்வார்ஜிதமுடையவளாயிருந்தும் விரைவில் அவையனைத்தையும் விரயம் செய்து கடைசியில் கடனுக்காகச் சிறைப்பட்டாள். இந்த ஸ்திதியில் நாடகத்தின்வரும படியிலிருந்து வருஷத்துக்கு நூறு தனக்குக்கொடுத்து வந்த குமாரனாகிய 'ஸாம்' என்பவனுக்கு "அன்புள்ள 'ஸாமே' கடனுக்காக நான் சிறையிலிருக்கிறேன். ஈ-பூட், மென்னும் உன் அன்புள்ள தாய்க்குவந்து உதவிபுரி" என்று எழுதினாள். அதற்கு அவள் குமாரன் "அருமையுள்ள தாயே! நானும அப்படியே யிருக்கிறேன். ஆகையால் அன்புள்ள உன்னுடைய குமாரனால், அவனுடைய பிரியமுள்ள தாயாருக்குச் செலுத்தவேண்டிய கடமை முட்டுப்படுகின்றது" என்று தக்கபடி மறுமொழி தந்தனன்.

ஒரு மௌட்டியத்தாயானவள் நலமசான்ற தன்குமாரனுடைய மனதில் நியாயமில்லாத கருத்துக்களைப்புகுத்துவதால் அவனைக்கெடுத்துவிடலாம். இவ்வாறு லேமர்டைனினுடைய தாயாரானவள் ரௌசியு பெர்நார்டைன்-டி-ஸென்ட்பியெரியின் சித்தாந்தங்களின் முற்றும் தப்பான கருத்துக்களில் அவரைப்பழக்கியதால் இயல்பில் மிக்க பலம்பூண்ட அவருடைய (Sentimentalism) மனோபிஷ்ட சித்தாந்தத்தின் விதண்டாவாதமானது க்ஷீணப்படுவதினும் விருத்தியடைந்தது. அவருடைய ஜன்மமுழுதும் கண்ணீரும் பாவனையும் முன்யோசனையின்மையுமாகவிருந்தார். அவர் தன் 'காண்பிடென்ஸ்' என்னும கிரந்தத்தில் இளைஞருக்கு மாதிரியமாறு தன்னைகௌமாரபரிபக்குவப்பிரதிமையாக வகுத்திருத்தலானது நகைத்தற்பாலதேயாம். அவர் தம் தாயாருடைய கெட்டொழிந்த குழந்தையாயிருந்தது போல அந்தியம்வரை தம் தேசத்துக்கும் கெட்டொழிந்தவராக இருந்தனர். அது வெறுப்பும்துக்கமுமுள்ளதாயிருந்தது.'ஸென்ட்பியூவி' அவரைப்பற்றி சொல்லுகிறதாவது "அவர் என்றும் மிகுந்தபாக்கியங்களுக்குப் பாத்திரமாயிருந்தார். வார்த்தைகளின்பாக்கியம் நீங்கலாக ஏனையனைத்தையும் ஒழுங்காய் நடத்தச்சக்தியின்றிச் சிதறிச்சீர்கெ

டுத்துவிட்டனர். இவ்வார்த்தைப்பாக்கியமானது எடுக்கக்குறையாமல் மந்திரிக்கப்பெற்றகுழலைப்போன்று கடைசிவரை பிரயோகிக்கப்பட்டுவந்தது.''

உவாஷிங்டனுடைய தாயார் மிகவும் நேர்த்தியான வேலைக்காரியென்று நாம் பேசியிருக்கிறோம். வேலைக்குத்தகுதியான குணத்தை வகித்தலானது உண்மையான ஸ்திரீக்குப்பொருத்தமட்டுமென்று; கிரமமாய் ஆளப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் சௌக்கியத்திற்கும் நன்னிலைக்கும் ஒருவாறு முக்கியமானதாயிருக்கின்றது. வேலையின் பழக்கங்கள் வியாபாரத்திற்குமட்டுமன்று, உலகநடையில் ஒழுங்குசெய்து, இனம் தொகுத்து ஆயத்தம் செய்து, காரியப்படுத்த வேண்டிய சகல காரியங்களுக்கும் உபயோகப்படுகின்றது. இந்த விஷயங்களிலெல்லாம ஒரு குடும்பத்தாரையும கிருக நிருவாகத்தையும் நடத்தலானது ஓர் வியாபாரஸ்தலம், அல்லது கணக்கர்சாலைக்கு இன்றியமையாத வேலையின் அம்சமாக இருக்கின்றது. ஒழுங்கு, திட்டம், இனம், தொகுத்தல், தாளாண்மை, கைவிடாமை, சிக்ஷை, சாமர்த்தியம், அறிவு, பயனுக்குத்தக்க சாதனங்களைக்கொள்ளும் சாமர்த்தியம் ஆகிய இவையனைத்தும் காரியாம்சத்திற்கு வேண்டற்பாலன. குடும்ப காரியங்களில் நேர்ந்து குடும்பத்தைச் சந்தோஷப்படுத்தும் ஸ்திரீகளால் வியாபாரம் கைத்தொழில்களில் உள்ள புருஷர்களைப்போல, வேலை பார்க்கும் பழக்கங்கள் அவசியமாய் விருத்தி செய்யப்படல்வேண்டும்.

ஆகிலும் ஸ்திரீகளுக்கு இக்காரியங்களில் சம்பந்தமின்றெனவும் காரிய நிர்வாஹத்திற்குரிய நடபடிகளையும் அதிகாரமும் புருஷர்களுக்கே உரியன எனவும், இதுவரை கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. உதாரணமாக, எண்சுவடி கற்பித்தலை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு பையனுக்கு கணக்கை முழுதும் கற்பியுங்கள், அவன் முழுமனுஷனாகின்றனன். ஏன்? அது அவனுக்கு ஒழுங்கு, திட்டம், மதிப்பு சராசரி சம்பந்தமாகிய இவற்றைக் கற்பிக்கின்றது. ஆனால் எத்தனை பெண்கள் கணக்கு நன்றாய்க் கற்றிருக்கின்றனர்? உள்ளபடியே மிகவும் சிலரேயாவர். அதன் பயனென்னை? சிறுமியானவள் கிருகஸ்திரீயாகு

ங்கால்எண்ணிக்கை வடிவுகள் தெரியாமல் கூட்டலும் பெருக்கலும் உணராதிருப்பின், வரவு செலவுக்குக்கணக்கு வைக்க அவளுக்கு முடியாது. ஆகவே, அநேக தொடர்ச்சியான தப்புகளுககு இடமுண்டாகி குடும்பத்தார்க்குள் மனஸ்தாபத்தையே பெருக்கிக்கொண்டிருக்கலாம். சாதாரணமாய்க்குடும்பத்தில் அறியவேண்டிய கணக்கு விதிகளைத் தழுவி தன் குடும்ப காரியங்களை நடத்தும் திறமையின்மையால் அந்த ஸ்திரீயானவள் கேவலம் அறியாமையால் அதிகரிரபமானசெலவுகளைச் செய்து குடும்பத்தின் சமாதானத்திற்கும் சௌகரியத்திற்குமகெடுதலை உண்டாக்கலாம்.

(இன்னும் வரும்.)

---

உ

# மகாபாரதச் செய்யுட் பாடாந்தரம்.

(உருரு-ம் பக்கத்தொடர்சசி.)

## நிரைமீட்சிச் சருக்கம்

### ாசக-ம் செய்யுள்.

மகனிவைமற்றுரைத்தளவிற்றுதைகேட்டு
மனநடுங்கிபிருடியுடன் மகிழ்ச்சிகூர்ந்தான்.

இம்முதலடியில், 'மனநடுங்கி யிருடியுடன் மகிழ்சசி கூர்ந்தான்' எனபது "மனநடுங்கி நெகிழ்சசியுடன் மகிழ்சசி கூர்ந்தான்" எனக்காணப்படுகின்றது. பாண்டவர் சரிதத்தைத் தனித்திருந்து விராடனுக்கு உத்தரன் சொல்லத் தொடங்கினன் என ாஙஎ-ஆங் கவியிற் பெறப்படுதலால், உத்தரன் கூறக்கேட்டவளவில் விராடன் அறியாது செய்த பிழைக்கு மனநடுங்கியும், கிடைத்தற்கரியார் நமக்குத்துணையாகவநசெய்தினரென்றதனல் மனவுருக்கத்துடன் மகிழ்சசியுந கூர்ந்தான் எனப்பொருள்கொள்ளநிற்பதே யிணைபுடைத்தாதலின் இப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

## வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம்.

### உ௰-ம் செய்யுள்.

கூறியவேகநாகக்கொடியவனகனறபின்னர்த்
தேறியவிசயனேடுஞ்செழும்புனற்றுவரைநீங்கி

யாறிருநாமத்தோனுமையிருநாயத்தோனு
மூறியகருணைநெஞ்சினுதிட்டிரனிருக்கைபுக்கார்.

இக்கவியிலே, பின்னிரண்டடியில் நாநாரணரிருவருந் தருமனிடஞ்சேர்ந் தாரெனக்கூறலால், விசயனோடும் என்பது நின்று பயனின்மையாயிருத்தலின், "தேறிய விசையினோடும்" எனக்காணப்படுகின்ற பாடமே பொருத்தமுடைத்தென்க.

## கிருட்டிணன் றூதுச்சருக்கம்.

### உ௱௨௰-ம் செய்யுள்.

அந்தணன்முன் றருமந்திரமைந்தினிலறுவரையுங்
கடவுட் குந்தியயந்தனள்,...

என்னுமிக்கவி முதலடியில், 'மந்திரமொன்றினிலறுவரையும்' எனக்காணப்படுகின்றது. சம்பவச்சருக்கம் ௨௯-ஆங்கவியில், "ஒருமறைசெவிப்படுத்து" எனக்கூறலாலும், இச்சருக்கம் ௨௱௪௯-ஆங்கவியில், "முன்னைவந்தொருமந்திரந்தவமுனிமொழிந்தாய்" எனக்கூறலாலும் இப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

### உ௱௪௰-ம் செய்யுள்.

பொன்னினாசனத்திருத்திமெய்யருளுடன்பூசையுமுறைமுறை புரிய.

என்னுமிவ்விரண்டாமடியில், "மெய்யன்புடன் பூசையமுறைமுறை புரிய" எனக்காணப்படுகின்றது. பூசைபுரிவோரன்பும் அதனைப்பெறுவோர் அருளுஞ்செய்யவேண்டுதலாலிப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

## படையெழுச்சிச் சருக்கம்.

### அ-ம் செய்யுள்.

சோனைமாமுகிலேழுமொத்ததிர்ந்தனதுந்துபிக்குலம்வந்த,

என்னுமிவ்வடியில், "முகிலேழுமொத்ததிர்ந்தெனத்துந்துபிக்குலமார்ப்ப" எனக்காணப்படுகின்ற இப்பாடமே இக்கவியிற் கூறிய கடல் என்பதற்கியையுடைத்தாயிற்றென்க.

## அணிவகுப்புச் சருக்கம்.

### கூ-ம் செய்யுள்.

நிரையினைமப்பெறுவிழிசிவப்பெழநிருதரொத்தனர்வீருதரே.

என்னுமிவ்வடியில், "இமைப்பறுவிழிசிவப்பெழ" எனக்காணப்படுகின்றது. "அழித்திமைப்பினேட்டன்றேவன்கணவர்க்கு" எனத்திருக்குறளிலுங் கூறப்படுதலாலிப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

கசூ-ம்செய்யுள்.

ஆனதெனவீடுமனுமதிரதரின்மிக்கதனுவாசிரியனும்புதல்வனுந்
தானுமுயர்பூரிசரவாவுமிவர்சோமவரதத்தபகதத்தர்கள்வழா
மர்னமிகுதுன்மருடனற்றலைவர்மாரதரில்வன்கிருதபன்மவரசன்
ஞானகிருபன்சகுனிசல்லியசயத்திரதனன்சமரதத்தலைவரே.

இக்கவியில், "துன்மருடணன்றலைவர்" என்றும், "கிருதபன்மனரசன்" என்றும் 'சல்லிய சயத்திரதர்' என்றுங காணப்படுகின்றன. துர்மருஷணன் என்பது துன்மருடணன் எனவருதல் முறையாதலாலும், அரசன் என்பது துரியோதனனையாதலாற் கிருதபன்மனரசன் எனக்கூறுதல் வேண்டுமாதலாலும், சல்லியசயத்திரதர் எனவும்மைத்தொகையிற் கூறுதல் வேண்டுமாதலாலுமிப்பாடமே பொருத்தமுடைமைகாண்க.

## முதற்போர்ச் சருக்கம்.

ருஎ-ம் செய்யுள்.

உவகைதன்னெடுவீடுமற்குறுமுநவியாகமகீபனுஞ்
சகுனிசல்லியனவரையும்பலதம்பிமாரையுமேவினன்.

இக்கவியில் 'உகவைதன்னெடு' எனக்காணப்படுகின்ற பாடமே எதுகைக்குப் பொருத்தமுடைமைகாண்க.

## இரண்டாம்போர்ச் சருக்கம்

எ-ம் செய்யுள்.

வீடுமன்மகீபரோடுநடுவண்வந்துமேவினன்.

இவ்வடியில், "மகீபனேடு" எனக்காணப்படுகின்றது. மகீபர் என ஏனைய ரசரைக்கூறவேண்டுவதின்மையாலும், துரியோதனனைக் கூறவேண்டுவது முறையாதலாலும் இப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

௰ா-ஆம் செய்யுள்.

பழையதஞ் சிறகுடன் பறப்ப போன்றவே.

இவ்வடியில் 'பழைய கல்சிறகுடன்' எனக்காணப்படுகின்றது. சிறகுடன் பறப்பன இவையென விளங்காமையாற் 'பழையகல்சிறகுடன்' என விளங்கக்கூறும் பாடமே பொருத்த முடைத்தென்க.

## மூன்றாம்போர்ச் சருக்கம்.

### உச-ஆம் செய்யுள்.

*நின்றருச்சுனன்பொரமறந்ததுநெடியசெங்கண்மாலேமிதொட்டதும்*
*பின்றைவில்லெடுத்தமர்மலைந்ததுப்பேசினான்மகீபதிபிதாமகன்.*

இக்கவியில், "வில்லெடுத்தவன்மலைந்ததும்" எனக்காணப்படுகின்றது. வில்லெடுத்தமர் மலைந்தது செங்கண்மாலெனவுங் கொள்ளக்கிடத்தலால், வில்லெடுத்தவன் மலைந்தது என்பது அருச்சுனனைச் சுட்டுதற்குப் பொருத்தமாயிருத்தலின், இப்பாடமே சிறப்புடைத்தென்க.

## நான்காம்போர்ச் சருக்கம்.

### ய௨-ஆம் செய்யுள்.

பொன்னுகமணிப்புயவெங்கதையால்.

இவ்வடி, "மின்னுக மணிப்புயன் வெங்கதையால்" எனக்காணப்படுகின்றது. இங்கே யானைப்போரில் ஒவ்வொரு கவியிலும் வீமனைச் சுட்டிக் கூறுதலால், இக்கவியிற் கூறுமை பொருத்தமின்றாதலின் இப்பாடமே சிறப்புடைத்தென்க.

## ஐந்தாம்போர்ச் சருக்கம்.

### உச-ஆம் செய்யுள்.

எப்போதுமருப்போரினிவிசயங்களிகூர்வார்
கைப்போதுறுபடைசெம்புனல்கடலுண்டதுகால்வார்.

இக்கவியில், "செம்புனல் வழியே யுயிர்காய்வார்" எனக்காணப்படுகின்ற இப்பாடமே பொருள்கூறுதற் கியைந்திருத்தல் காண்க.

## ஆறாம்போர்ச் சருக்கம்.

### உகூ-ஆம் செய்யுள்.

மாலுமதகடசாலநுதலுமருப்புமொருகையும்வதனமும்.

இவ்வடியில், "மதகடசாலு நுதலும்" எனக்காணப்படுகின்றது. மதத்தையுடைய கடமாகிய சால் எனப்பொருள் கொள்ளுதற்கிப்பாடமே பொருத்தமுடைத்தென்க; கடம்—கதுப்பு. சால்—நீர்ச்சால்.

## ஏழாம்போர்ச் சருக்கம்.

### கூ-ஆம் செய்யுள்.

**பாரவாளினுங்கூரவேலினும்பகழிவாயினும்பட்டபட்டபோர்**
**வீரவாளின்மேல்வழிநடத்தலான்.**

இக்கவியில், 'பட்டபட்டபோர்' என்பது சிறிதும்பொருட்பொருத்தமின்மையால், "பட்டபட்டபேர்-வீரவானின் மேல்வழி நடத்தலான்" எனக்காணப்படும் பாடமே பொருத்தமுடைத்தென்க.

## எட்டாம்போர்ச் சருக்கம்

### ௩௬-ஆம் செய்யுள்.

குலபாநிருபர்குடர்சோருங்குருதிவெள்ளப்
பலமாநதிபோய்த்திரைவேலையிற்பாய்ந்ததோற்றம்

இக்கவியில், "குருதிவெள்ளப்பலமாநதி" எனக்காணப்படும் பாடமே சந்தியிலக்கணத்திற் கியைந்து பொருடரு மென்க.

## ஒன்பதாம்போர்ச் சருக்கம்.

### ௩௧-ஆம் செய்யுள்.

கரியுங்காமுஞ்சிலர்பட்டார்கலுழ்வாய்மதுகைக்கால்வேகப்
பரியுங்காமுஞ்சிலர்பட்டார்

இக்கவியில், 'கலுழ்வாய்' என்பது பொருட் பொருத்தமின்று தலால், "கலிவாய் மதுகை" எனக்காணப்படும் பாடமே பொருத்த முடைத்தென்க.

## பத்தாம்போர்ச் சருக்கம்.

### ௩௧-ஆம் செய்யுள். (நகையா.

காரிவெங்கொடும்பகழிமோதுதின் சிகண்டி தலைநாணிலுங்குனிந்து

இக்கவியில், 'பகழிமோதுதிண்சிகண்டி' என்பதினும் "பகழியேவு திண்சிகண்டி" எனக்காணப்படும் பாடமே பொருட்சிறப்புடைத்தென்க.

## பதினோராம்போர்ச் சருக்கம்.

### ௨௨-ஆம் செய்யுள்.

அற்றவிற்றுணிகளாலரியையும்பகையையுந்
செற்றனன்சென்றனன்றேரொடுந்தேருக.

இக்கவியில், "தேரொடுந்தேருற" எனக்காணப்படுகின்ற பாடமே பொருட்பொருத்த முடைத்தென்க.

இங்ஙனம்,

**சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.**

# *ஹிந்து சாகபட்சகனு யிருப்பதேன்?

"திங்கற்றபிராணிகளது ஊனைத்தின்று தன்னூனை வளர்ப்பவனும், கொடியோனும், தன்னயங்கருதுவோனும் யாவன்?"

"தெள்ளறிவு, அழகு, நோயற்றவாழ்வு, சரீரவலி, மனவலி, ஆத்மசுகம் இவைகளை வேண்டுவோன் ஊனுண்ணுதிருக்கக்கடவன்."

(மஹாபாரதம்.)

[ஸுஹிம்ஸாஸாவஜ்யொஜாயுஃ]

[நோன்பென்பது கொன்றுதின்னுமை]

தற்காலத்துப் பேர்போன வைத்தியர்களும், ஆகாரமுறையைச் சீர்திருத்துவோர்களும் மனிதர்க்கு நிர்த்தோஷமான ஆகாரம் எது வென நிர்ணயிப்பதிலும், மேனுடுகளில் உணவுச்சீர்திருத்தம் உண்டாக்குவதிலும், மிக்ககவலையெடுத்துக்கொண்டிருக்கிறுர்கள். அவர்களது முயற்சியால், அமெரிக்காவில் புத்திமான்களாயுள்ளவர்கள் மரக்கறி கொடிக்கறி உண்பதினுலுண்டாகும் நற்குணத்தை வரவர அறிந்து வருகின்றுர்கள். தாங்களும் சாகபட்சகராய் விடலாமா வெனவும் யோசிக்கிறுர்கள். இப்பொழுது நடப்பதுபோல் மேனுட்டில் இதற்கு முன் அவ்வளவு ஊக்கத்துடன் இவ்விஷயம் விசாரித்து வாதிக்கப்பட்டதில்லை. பிதாகோரர் (Pythagoras), பிளேட்டோ (Plato), ஸாகர்டீஸ் (Socrates), சேனகர் (Seneca), புளுடார்க் (Plutarch), திருத்தலையர் (Tertullian), பாற்பிரியர் (Porphyry), முதலிய, புலாலை மறுத்துக் காய்கறியுணவே மேன்மையெனக் கொண்டாடிய, அநேகம் ஞானிகள் பழைய கிரேக்கர்களுக்குள் உண்டு. ஆனுல் தற்காலத்தில் மேனுட்டாருள் பெரும்பான்மையோர் காய்கறி உணவு உண்பவர்களை இகழ்ந்து பரிகசிக்கின்றுர்கள். ஆரியாவர்த்தத்தில், பிதாகோரர் (Pythagoras) பிறப்பதற்கு வெகு நாளைக்கு முன்னமேயே நமது ஆரிய இருஷிகள் இப்புலால் மறுப்பதைக்குறித்து சித்தாந்தம் செய்திருக்கின்றுர்கள். ஜீவவதை கூடாதென்றும், மாமிசபக்ஷணம் கூடாதென்றும், யுக்திக்கும் சாஸ்திரத்

* இஃது, அமெரிக்காகண்டத்து நியூயார்க்குப் பட்டணத்தில் "சாகபட்சகர்சபை"யிலே, சுவாமி-அபேதானந்தராற் செய்யப்பட்ட ஆங்கில வுபந்நியாசத்தின் மொழிபெயர்ப்பு.

*

திற்கும் ஒத்தகாரணங்கள் காட்டி, நூல்கள் எழுதியிருக்கின்றார்கள். சரித்திரம் ஏற்படாத காலத்திற்கு முன்னமேயே காய்கறிஉணவே மேலானதெனக்கொண்டு அவ்வுணவை அனுஷ்டித்தும் வந்த ஆரிய மேலோரிடமிருந்து, பிதாகோரர் (Pythagoras) அவ்வுணவுபற்றிய தமது கொள்கையைக் கற்றறிந்தார் என்று அநேகம் சரித்திரகாரர்களும் கீழ்நாட்டுப்புலவர்களும் எண்ணியிருக்கிறார்கள்.

ஜனங்களிற் பெரும்பான்மையோர் காய்கறியுண்ணும் வழக்கம், இப்பூவுலகில், அநேக ஆயிரவருஷங்களாக இந்தியாதேசம் ஒன்றிலேயே பரவியிருக்கின்றது. அவ்வுணவேன் உண்ணவேண்டுமென்பதின் சரியானநியாயத்தை அச்சாதியாரே முதலில் அறிந்தவர்கள். சீனர்கள், ஜப்பானியர்கள், திபேத்தியர்கள் ஸியர்கள், பர்மியர்கள், இலங்கை நாட்டினர்கள்—'தின்னும் பொருட்டு ஜீவவதை செய்வது கொடிது: காருண்யமற்றது: தீது' என்ற கொள்கையை ஆரியர்களிடமிருந்தே அறிந்துகொண்டார்கள். சரீர சுகம், சரீர அங்க அமைப்பு, உணவுகளின் குணகுணம், நீதிவழிபற்றியும் மதவழிபற்றியுமுள்ள ஜீவலக்ஷணம் முதலிய வெவ்வேறு நிலைகளை அநுசரித்துக் கறிகாயுணவே மேலானதென்று, ஆரியவர்த்தத்தின் நுண்ணறிவுடையோரும், இருஷிகளும் காரணங்கள் எடுத்துக்காட்டி விளக்கி இருக்கிறார்கள். சுதேசவைத்தியர்கள் மாமிச உணவு கூடாது என்கிறார்கள். மாமிச உணவே அஜீர்ணம், குன்மம், கீல்வாயு, க்ஷயம், நரம்பின் ஒழுங்கீனம் முதலிய வியாதிகளுக்குக் காரணமெனமேனாட்டு வைத்தியர்கள் அபிப்பிராயப்படுவது போலவே, அவர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். கொல்வதற்கென்று கொழுக்க வளர்க்கப்படும் மிருகங்கள் முறைதப்பிய உணவுகள் ஊட்டப்படுவதாலும் முறைதப்பிவளருவதாலும் ஏதேனும் ஒரு விதநோய் உடையனவாயிருக்கவேண்டுமென்றும், அநேக நோய்களுக்கு வித்து மனிதசரீரத்திற்குள் புகுகின்றனவென்றும், பிராணிகளின் மாமிச மூலமாய் மனிதசரீரத்துள் கிருமிகள், பூச்சிகள் செல்லுகின்றனவென்றும் சொல்லுகின்றார்கள்.

மாமிசம், உண்ணுமுணவின் சத்துபாகத்தினு லுண்டாவதால், அவ்வுணவுமுழுதும் சீரணிப்பதன்முன் மிருகத்தைக் கொல்லுவ

தால் உணவுமுற்றும் சீரணியாமல் கழிக்கப்பட்ட வஸ்துக்களும் அசுத்தமும் அம்மாம்ஸத்தில் தங்கிவிடுகின்றது. இக்கழிபட்ட வஸ்துக்களில் முக்கியமாய் (creatin) போன்ற பாஷாணமுண்டு. மாமிச உணவு, வேண்டா அளவிற்குமேல், இரத்தத்தில் fibrin என்றதசையை வளர்த்து வருகின்றது. இதனால் உடம்பில் வரம்பு மீறிச் சூடுண்டாகின்றது. சூடேறுவதால் விசேஷ சுருசுருப்பும் அலைப்பு முண்டாகின்றன. இதன் முடிவோ, புலாலுண்ணும் பெரும் பான்மையோர், அதன் பயனுக நரம்புத்தளர்ச்சியினுலும், ஓய்வினுலும் மெத்த அவதிப்படுகிருர்கள். புலாலை ஓயாமலுண்பதால் ரத்தாசயத்தின் தொழில் அதிகப்படுகிறது. அதனுல் உயிர்வலிமையெல்லாம் குன்றிவிடுகின்றது. உடற்கூறு அறிந்த சாஸ்திரிகளும், (Sir Everard Home) ஸர் எவரார்ட் ஹோம் போன்ற உடற்கூற்றுப் பரிசோதகர்களும், மனிதனுடைய பற்கள், இரைப்பை, ஆகாரக்குழல், ரத்தத்திலுள்ள பரமநுட்பமான இரத்தப் புழுக்கள் (corpuscles) இவைகளின் அமைப்பையும், இரை ஜீர்ணிக்கும் தன்மையையும் உற்றுணர்ந்து பார்த்து, மனிதன் தன்னியற்கை அமைப்பால், தழைகுழை உண்ணும் பிராணிகளை அதிகமாய் ஒத்திருக்கின்றுனே யல்லாது மாமிசமுண்பவைகளை ஒத்திருக்கவில்லையென்று நன்கு எடுத்து விளக்கியிருக்கிருர்கள்.

பலவிதமான காய்கறிகள், தானியங்கள், பழங்கள், கொட்டைகள் முதலியவைகளின் பிரகிருதியையும், வெவ்வேறு பிராணிகளின் மாமிசங்களின் பிரகிருதியையும் விசேஷமாகப் பரிசோதித்தும், ஒன்ருேடொன்று ஒப்பிட்டும் பார்த்தால், தாது வர்க்கத்திற்ருன், தசை வளரவும், நரம்புகள் உறுதிகொள்ளவும், சரீரமுழுமையும புஷ்டி கொள்ளவும் சத்து இருக்கிறதென்று நன்கு விளக்கிக் காட்டலாம். சரீர புஷ்டிக்கும் வளர்ச்சிக்கும் முக்கிய ஆதாரமான கொழுப்பும், லோகவஸ்துக்களும் ஜீவவர்க்கத்திலிருந்து கிடைப்பதுபோலவே, தாதுவர்க்கத்திலிருந்தும் ஏராளமாகக் கிடைப்பதுடன், ஜீவவர்க்கத்திற்கிடையாத மதுவஸ்துவும், தாதுவர்க்கத்திற் கிடைக்கின்றது. உண்மையிவ்வாறிருக்க, மாமிசவுணவை ஏன் நாம் உண்ண வேண்டுமென்னும் கேள்வியுண்டாகின்றது. புஷ்டியுண்டாக்குவதற்காகவா? அல்ல. அந்தப்புஷ்டி, காய்கறிகளும், தானியங்களும், பயறு

களுந்தின்ன உண்டாகும். சரீரசௌக்கியத்தின் பொருட்டா நாம்புலா லுண்கின்றோம்? ஒருபொழுதுமில்லை; மரக்கறியுண்பவர்களே யொத்தத்தில் புலாலுண்பவர்களில் பெரும்பாலரைவிடச் சௌக்கியமாயிருக்கிறார்கள் இப்படியிருக்க, புலாலுண்ண வேண்டுவதேன்? தொன்று தொட்டு வரும் பழக்கவாசனையும், மூடபுத்தியும், பாரபட்சமும், அறிவின்மையுமல்லது வேறு காரணமில்லை.

ஜனங்கள் உழவுத்தொழில் அறியாத பழயகாலத்தில், ஏராளமாய்க் கிடைத்த பழங்கள், கொட்டைகள், காய்கறிகள் (கந்தமூலபலங்கள்) இவைகளையுண்டே பொழுது போக்கினார்கள். கந்தமூலபலங்கள் கிடைப்பது அரிதெனஅறிந்தஜீவர்கள் தமதியற்கைக்கேற்ப, ஒருவரோடொருவர் திண்டாட்டம் போராட்டம் அதிகரிக்கவே, தமக்குக் கிடைப்பதெதையுந் தின்றார்கள். அவ்வாறு திண்டாடும் பொழுது, தினம் ஏதானுலும் உயிர் பிழைத்தாற் போதுமென்றே முடியும். உழவுத்தொழிலைப்பற்றி யெதுவு மறியாத மிலேச்சர்களுக்கு (கானவர்) கனிகளும் கந்தமூலங்களும் கிடைப்பதரிதாகவே காட்டு விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழுப்பூச்சிக ளிவைகளைத் தின்று பிழைக்கின்றார்கள். மனிதன் புலாலுண்ண ஆரம்பித்தது இப்படித்தான். வேறென்றின் மாமிசம் மனிதர்களுக்கு இயற்கை (பாயமைந்த) உணவெனச் சிலர் வாதிக்கின்றார்கள். இது சவறு: புலாலுண்ணும் பழக்கம் அவசியத்தாலுண்டாகிப் பரம்பரையாய் வந்துவிட்டது. நாகரீகம்பெற்ற தேசங்களில் அனேகர், வாலைப்பருவமுதலே பெற்றோர்களுண்பது கண்டு தாங்களும் மாமிசந் தின்னப் பழகுகின்றார்கள். இவ்வாறு மாமிசவுணவின்றித் தாம் பிழைக்கமாட்டார்கள் என்ற மூடஎண்ணம் அவர்களுக் குண்டாகியிருக்கிறது. சில மிலேச்சர்களுக்குக் காட்டுமிருகமாமிசவுணவுவேண்டியமட்டும் கிடையாதபொழுது நரமாமிச பட்சகராய் விடுகின்றார்கள். மிலேச்சர்களது வாடிக்கையால் மனிதனுக்கு மனிதமாமிச மியற்கையுணவெனச் சொல்லலாமோ? ஆஸ்திரேலியநாட்டுப் பழையகுடிகள் அருவருக்கத்தகும் புழுக்களையும் ஊர்வனவற்றையும் தின்கின்றனர். இந்தியாவில் மலைகளிலுள்ள ஓர் வகைப்பழங்குடிகள் விஷப்பாம்புகளை அதிக ஆசையுடன் தின்கிறார்கள். இதனால் அவ்வுணவு மனிதனுக் கியற்கையுணவெனச் சொல்வோமா? தக்கபடி பாகஞ்

செய்துவிட்டால் மனிதன் எதையும் தின்னலாம். இதனால், பன்றி போலெதையும் தின்னக்கூடியவ னெனச்சொல்லுவது முறையோ? 'காடுமூனே' நாட்டி லுள்ள பசுக்கள், மீன் கழிவைத் தின்கின்றன. மாட்டிறைச்சிதின்னக் குதிரைகளைப்பழக்கலாம். புகைச்சுருட்டுப் பிடிக்கக் கரடிகளைப் பழக்கலாம். குரங்குகள் காபி, டீ, சாராயமிவை கள் குடிக்கப்பழகுகின்றன. இவ்வாறு மனிதன் தானாக உண்டுபண் ணிக்கொண்ட வாடிக்கையை யாதாரமாகக்கொண்டு அவனிறைச்சி தின்பதற்குச் சார்பாக வாதிக்கலாமோ? ஒருநாளுமில்லை. மனிதனுக் கியற்கை யுணவு மாமிசமன்று. இயற்கையாய்ப் பூமியில் முளைக்கும் காய்கறிகள், கனிகள், கொட்டைகள், தானியங்கள் இவைகளே யாம். (தொடரும்.)

ம. ஜகதீசஐயர்.

---

# "மதுரைத்தலவரலாறு."

:o:

[இப்பெயர்கொண்ட சிறு நூலொன்று, ஏட்டுப்பிரதியில், இச்சங்கத் துப் பாண்டியன் புத்தகசாலையில் உள்ளது. இவ்வேடு, மதுரை ஸ்ரீமத் பரமேசுவர பட்டரவர்களாற் கிடைத்தது. இற்றைக்கு 580-வருஷங்கட் கு முன்பு மதுரையாண்ட "வாளால்விழித்துறங்கும் பராக்கிரமபாண்டியதே வா"*முதலாக ஆங்கிலேயர் ஈறாகவுள்ள அரசர் வரலாறுகள்—அவரவர்கால ம், செயல்கள் முதலியவற்றுடன் —எளியவசன நடையில், இந்நூலில் விள க்கப்பட்டிருக்கின்றன. பழைய சரித்திரங்களை வான்முறையே வைத்து வச ன ரூபமாக எழுதப்பட்ட நூல்கள்—இதைப் போல—மிகுதியாக நம் நாட் டில் காண்டல் அரிது. "மதுரைத்தேசம்" (Madura Country) என்னும் பெருநூலெழுதி வெளியிட்ட நெல்ஸன் துரையவர்கள், தம்மேற்கோள்க ளில் "ஸ்ரீதலபுஸ்தகம்" என்று அடிக்கடி எடுத்தாள்வது இப்புத்தகமா யிரு க்கலா மென்று தோற்றுகிறது. இந்நூலில் ஆளப்பட்ட வசனநடை அவ் வளவு சிறந்ததாகத் தோன்றாதாயினும், கூறப்பட்ட விஷயங்களோ மது ரைவரலாறு அறிதற்கு மிகவும் வேண்டத்தக்கவை என்பதில் ஐயமில்லை. இந்நூலை, நம்செந்தமிழபிமானிகளும் படித்துவக்குமாறு, ஏட்டிலுள்ளபடி யே, இப்பகுதி முதலாக வெளியிடத் தொடங்குகிறேன். மதுரை வரலா று விஷயமாக (இங்குள்ள) வேறு சிறுநூல்கள் சிலவற்றையும், இவ்வாறே, வெளியிட்டு வரவும் எண்ணமுடையேன்.—பத்திராசிரியர்.]

---

* இப்பாண்டியன், சக ௵ கஉசுஅ-ல் தென்காசிக்கோயில் பிரதிஷ் டிப்பித்த "காசிகண்ட பராக்கிரமபாண்டிய" னின் வேறானவனென்பதை, அவ்விருவர்க்கும் வழங்கும் விசேடணங்களும் காலங்களுமே செவ்வையா கக் காட்டும்.

"சுவாமி உடையார் திருவாலவாயுடைய தம்பிரானார் கோயில்-காபாலியுடைய நாயனார் மதுரைக்கு வாய்ந்த பெருமாள் கோயில் (ஞாபகம்) "உடைய சிவன்புதல்வ னுக்கிரனுங் கப்பால், அடையு முடி யையெட்டு லக்கத்— துடைய றுபத்,தையா யிரத்தறு நூற் றைம்பதின் மேலழுகன், கைவேற் குலசே கரன்." இப்படி குலசேகர பாண்டியன் முதல் வாளால் விழித்துறங்கும் பெருமாள் பராக்கிரம பாண்டியத்தேவர் வரைக்கும் வெகு பாண்டியாதிக்கம் அனுபவித்து வாளால் விழித்துறங்கும் பராக்கிரம பாண்டியதேவரை, கலியுகத்தில் சாலிவாகன சகாப்தம் கூஉசுரு-க்குமேல் கொல்லமழிந்து ஆண்டு [1] உஉஎ-க்கு மேல்—ருத்ரோத்காரி ௵ ஆனிமீ வடக்கே டில்லியிலிருந்து ஆதிசுலுத்தான் மலுக்குநேமியான் [2] என்பானும் வந்து, பராக்கிரமபாண்டிய தேவரைப் பிடித்துக் கட்டிக்கொண்டு டில்லிக்கு அனுப்புவித்துப்போட்டு, ராச்சியத்தைக கட்டிக்கொண்டார்கள். உருத்ரோத்காரி ௵ ஆவணிமீ குரோதன ௵ வரைக்கும் வருஷம் மூன்றுக்கு ஹிமஸ்ஸேதுபர்யந்தம் துலுக்காணியமாய் மன்வந்தரமாய் ஒருவருக்கொருவர் தோற்காமல் கலாபமாயிருந்து, பின்பு, உலாபதிகான் (அல்லா உட்டீன்கான்?) என்கிற துலுக்கன் வந்து அட்சய௵ முதல் ப்ரஜோத்பத்தி௵ வரைக்கும் வருஷம ஆறுக்கு ராசசியம் ஆண்டான். பின்பு உலாபதிகான் உதசிக்கு ஆய்ந்துறுலன் [3] ஆங்கீரஸ௵ முதல் பவ௵ வரைக்கும் வருஷம் மூன்றுக்கு ராச்சியம் ஆண்டான். பின்பு மேற்படி மருமகன் குதிபதிக்கு [4] என்கிறவன் யுவ ௵ முதல பிரமாதீச௵ வரைக்கும் ராஜயமாண்டான். பின்பு விக்கிரம௵ ஆடிமீ முதல் விய௵ வரைக்கும் நகலதிகதி [5] என்கிறவன் ராஜ்பம ஆண்டான். பின்பு சாவது மலுக்கன் [6] ஆட்டிமாநுகன் [7] என்கிறவர் சர்வஜித்௵ முதல் விளம்பி௵ வரைக்கும் ராஜ்பம் ஆண்டார்கள். பின்பு விகாரி௵ முதல் சாதாரண௵ வரைககும புங்கதிக்கு மலுக்கன் என்கிறவன் ராஜ்ஜியம ஆண்டான. சகாபதம் கஉசரு-முதல் சகாப்தம் க௨கூ௩-வரைக்கும ௵ ச , துலுககாணியமாய் நாயனார் மதுரைக்கு வாய்ந்த பெருமாளும் நாஞ்சில்நாடு (தேயத்துப்) போய், பஞ்சாக்ஷரத்

(1) இது கொல்லமாண்டானல் வருஷம் தவறும்.

(2) இவன், அபகீர்த்திவாய்ந்த அல்லா I என்பவனது சந்ததியானுடைய, பிரிஷ்டாவைச்சார்ந்த மாலிக்நேபிகாபராக இருக்கவேண்டுமென்பர்.

(3) Uttam-ud-dhin (?) (4) Kutub-ud-dhin(?) (5) Na-Kal-ud-dhin(?) (6) Savada Malik(?) (7) Ahad-Malik(?).

திருமதிலும் பதினான்கு கோபுரமும் தெருவீதிகளும் இடிபட்டது. நாயகர் கோயில் கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் வரைக்கும் தப்பியிருந்தது.

"இப்படித் துலுக்காணியமாக இருக்கும் நாளையில் கஉகூக-க்குமேல் செல்லா நின்ற விரோதிகிருது வருஷம் மைசூரான் வாசல் தளகர்த்தம் கம்பண உடையார் * (கன்னடியர்) துலுக்கனை வெட்டித் துரத்தி ராச்சியம் கைக்கொண்டு சிவஸ்தல விஷ்ணுஸ்தலமெல்லாம் திருக்காப்பு நீக்கி, திருவாலவாயுடைய நயினார் கோயில் சந்நிதியில் திருக்காப்பும் நீக்கி சுவாமிதரிசனம் பண்ணப்போகையில் சுவாமிக்கு அன்றைக்கு வைத்த விளக்கும் அன்றைக்குச் சாத்தின புஷ்பமாலையும், இராவில் பூசையிற் சாத்திக் காலசந்தியிற் கழிக்கும்போது எப்படியிருக்குமோ அப்படி இருந்தது. இந்த அதிசயத்தைக் கம்பணவுடையார் கண்டு வெகு சந்தோஷப்பட்டுக் கன்னங்களிலே அறைந்துகொண்டு வெகுபக்தியுடனே உபசாரங்கள் செய்து அநேக திருவிளையாடக் கிராமமும் விட்டுக்கொடுத்து அநேக திருவாபரணமுங்கொடுத்து திருவாராதனைக்கட்டளையும் நடப்பித்துக்கொண்டு-கம்பணவுடையார், அவர் மகன் எம்பணவுடையார், அவர் மருமகன் பொற்காசுடையார் - இவர்கள் மூன்றுபேரும் விரோதிகிருது வருஷ முதல் சித்திரபானு வருஷ வரைக்கும் வருஷ கூஅ-க்கு ராஜ்யம் ஆண்டார்கள். அவர் நாளையில் சிவஸ்தலம் விஷ்ணுஸ்தலமெல்லாம், அநேகந் திருவாபரணமும் திருவாராதனையும் பண்ணுவித்து நடப்பித்தார்கள்.

"பின்பு, சகாப்தம் கஉஉஎ-க்கு மேற்செல்லா நின்ற சுபானு வருஷ முதல் விபவ வருஷ வரைக்கும் வருஷ சஎ-க்கு லக்கணநாயக்கர், மதனநாயக்கர் ராஜ்யம் ஆண்டார்கள்.

"அப்பால் சகாப்தம் கஉஎச-க்கு மேல் செல்லாநின்ற சுக்கில வருஷ முதல் நள வருஷ வரைக்கும் வருஷ சஅ-பாண்டியராஜாவினுடைய வைப்பாட்டி காளையார்கோவில் தாசி அபிராமிவயிற்றுப்பிள்ளை சுந்தரத்தோள்மாவலிவாணாதிராயர், காளையார் சோமனார், அஞ்சாத பெருமாள், முத்தரசர், திருமலைமாவலிவாணாதிராயர் நாளையில்,

---

* இவர் விஜயநகர அரசரால் அனுப்பப்பட்டு, தென்னாட்டை ஜெயித்து; அவர் பிரதிநிதியாய் ஆண்டவரென்று தெரிகிறது. (Nelson's Madura country, Part III. Page 82.)

(இவர்களை) லக்கணநாயக்கர் கொண்டுவந்து பாண்டியனுக்குப் பிறந்த பிள்ளையென்று பட்டங்கட்டிவைத்துக் கையெடுத்துக் கும்பிட்டு ராஜ்யத்தையும் அவர்கள் கைவசப்படுத்திக்கொடுத்து ராஜ்யம் ஆண்டார்கள்,

"அப்பால் சகாப்தம் கசஉஉ-க்கு மேற்செல்லாநின்ற பிங்கள ௵ வைகாசி௴ நரசய்யநாயக்கர்* வந்து ராமேசுவரம் சேவித்துக் (கோட்டையையும் கைவசப்படுத்தினர்.) ஆவணி௴ முதல் ஆங்கிரஸ௵வரைக்கும் ௵கரு-க்கு தென்னையக்கர் ஆண்டார். அப்பால் சகாப்தம் கசகூஎ-க்கு மேற்செல்லா நின்ற ஸ்ரீமுக ௵ முதல் தாது ௵ வரைக்கும் ௵ ச-க்கு நாச்சியப்பிள்ளை † என்கிறவர் ராச்சியம் ஆண்டார். அப்பால் ஈசுவர ௵ முதல் விஷு ௵ வரைக்கும் ௵ ரு-க்கு குருகூர திம்மப்பநாயக்கர் ராஜ்யம் ஆண்டார். அப்பால் சகாப்தம் கசசசு-க்கு மேற் செல்லா நின்ற சித்திரபானு ௵ முதல் சுபானு ௵ வரைக்கும் ௵ உ-க்கு கட்டியங்காமய நாயக்கர் ராஜ்யம் ஆண்டார். தாருண ௵ முதல் சர்வஜித்து௵ வரைக்கும் ௵ ச-க்கு சின்னப்ப நாயக்கர் ராஜ்யம் ஆண்டார். சர்வதாரி ௵ முதல் நந்தன ௵ வரைக்கும் ௵ ரு-க்கு ஈயக்கரை வெய்யப்ப நாயக்கர் ராஜ்யம் ஆண்டார். விஜய ௵ முதல் விபவ ௵ வரைக்கும் ௵ கூ-க்கு விசுவநாயக்கரையன் ராஜ்யம் ஆண்டார். சுபகிருது ௵ வரத மன்னர்கள் ‡ பட்டம். சோபகிருது ௵ முதல் குரோதி ௵ கார்த்திகை ௴ வரைக்கும் ௵ க-க்கு தும்பிச்சி நாயக்கர் ராஜ்யம் ஆண்டார். குரோதி ௵ மார்கழி ௴ முதல் விசுவாவசு ௵ வரைக்கும் வருஷம் க, மாசம் ௩-க்கு விசுவநாத நாயக்கரையன் ராஜ்யம் ஆண்டார். பராபவ ௵ முதல் பிங்கள ௵ வரைக்கும் விட்டிலூர் ராஜா என்கிறவர் ராஜ்யம் ஆண்டார். காலயுக்தி ௵ முதல் ரௌத்ரி ௵ கார்த்திகை ௴ வரைக்கும் ௵ கூ-க்கு திம்மப்ப நாயக்கர், செல்லப்ப நாயக்கர்பட்டுக் கோட்டை ஏரப்ப நாயக்கர், —இவர்கள் மூன்று பேரும் ராஜ்யம் ஆண்டார்கள். சகாப்தம்-கஉசசு-க்குமேல் நாளது, சகாப்தம் கசஅக-க்கு சகாப்தம் வருஷம் உகூரு-க்கு ராஜ்யமது நாயாண்ட துரைகள் உஎ-பேர்." (இன்னும் வரும்)

---

*. இந்த நரசய்யநாயக்கரும் இவர்க்குப் பின்னர்ச்சொல்லப்படுவோரும் விஜயநகர அரசரின் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டு ஆண்டவர்கள்.

† நரசபிள்ளை என்று "மதுரை நாட்டிற்" காண்கிறது.

‡ வரதப்ப நாயக்கர் என்று காணக்காட்டுவர், நெல்ஸன் துரையவர்கள்.

# புத்தகக்குறிப்பு.

பகவத்கீதை வெண்பா:—உலகம்போற்றும் ஞான நூலாகிய ஸ்ரீமத்-பகவத் கீதை, அத்வைதபரமாக முன்னோரால் தமிழ்ப்பாவினத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருத்தலை அறிந்திருப்பவர் பலராயினும், விசிட்டாத்வைதபரமாக அது பண்டையோராற் செய்யுள் வடிவில் அமைக்கப்பட்டிருத்தலை அறிந்தவர் மிகச்சிலரே யென்னலாம். விசிட்டாத்வைதபரமாக அந்நூலைத் தமிழில் இயற்றியருளியவர் - வாதிகேசரி: ஸ்ரீ. அழகியமணவாளஜீயர் என்னும் பெரியார். இவர் இற்றைக்கு 600-வருஷங்கட்கு முன் விளங்கிய ஸ்ரீவைஷ்ணவாசாரியருள் ஒருவர்; வடமொழி தென்மொழிகளை நிலைகண்டவர்; பலகிரந்தங்களை அருளிச்செய்தவர். இத்தகைய ஆசிரியர், ஸ்ரீராமாநுஜபாஷ்யத்தைதழுவி கீதையை வெண்பாவில் மொழிபெயர்த்துள்ளாரெனின், அஃது இதுவரை வெளியிடப்படாதிருந்ததே தமிழ்மக்கட்கு ஆச்சரியந்தரத்தக்கது. இவ்வாசிரியரே, தம் வெண்பாப்பொருளையமைத்து மணிப்பிரவாளநடையிலும் கீதையை எழுதியுள்ளாரென்று தெரியவருகிறது. இவ்வரிய நூல் இதுகாறும் தமிழகத்தார் கண்ணுக்குத் தோற்றுதிருந்தகுறையை, ஸ்ரீரங்கத்தில் "ஸ்ரீவாணீவிலாச" அச்சுக்கூடத்தையும் தம் உழைப்பையுங் கொண்டு பல அரியகாரியங்கள் செய்துவரும் ஸ்ரீமாந் டி. கே. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள்நீக்கமுந்தியிருப்பது, பொதுவாகத் தமிழ்நாட்டார்க்கும் சிறப்பாக ஸ்ரீவைஷ்ணவர்க்கும் மகிழ்வூட்டுமென்பதில் ஐயமில்லை. இப்பகவத்கீதார்த்ததீபிகையின் முதல்ஷட்கமே, இப்போது குறிப்புரையுடன் நூற்பெருமைக்கேற்ப மிகவழகாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இஃது, பெண்கள் பாலர் முதல் யாவர்க்கும் பயனளிக்கத்தக்க அருமையான நூலாதலால், இதன் எஞ்சிய பாகமும் ஐயரவர்களால் வெளிவந்து இன்பம் பயக்குமென்றே நம்புகிறோம்.

வால்மீகிராமாயணக் கிளைக்கதைகள்:—இப்பெயர் வாய்ந்த நூலின் முதற்பகுதியொன்றும், சமீபத்தில், எம் பார்வைக்கு வந்தது. ஸ்ரீவால்மீகிபகவானால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீராமசரிதத்தில், இடையிடையே, சிறிதும் பெரிதுமாகிய உபாக்கியானங்களும் கூறப்பட்டுள்ளன என்பதை அறியாதார் அரியர். இக்கிளைக்கதையின் சுருக்கங்களை இந்நாலில் அமைந்திருக்கும் விஷயங்கள். இப்புத்தகம் முதற்பாகமாதலால், இதனுள் பாலகாண்டத்தும் அயோத்தியாகாண்டத்தும் உள்ள ௩௪-கதைகளே எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வாறு, ஒருநூலை யாவரும் அறிய ஒருமுகமாகத்திரட்டித்தந்தது, எவ்வளவு உபயோகமானதென்பதை யாம் கூறவேண்டியதில்லை. இதன் ஆசிரியர், தாம் அக்கதைகளை எழுதிச்செல்லுமுறையிலே, ஏற்றவிடங்களிற் கம்பர் வாக்கையும், பழமொழிகளையும் ஆள்வதோடு, "இ

லைக்கதையின் சாரம்'' என்னும் விஷயத்தாலும் சரிதங்களை மகிழ்ச்சிதருமாறு விளக்கிச்செல்கின்றனர். இந்நூலை, நம் நாட்டுப் பெண்கள் பாலர் முதல் யாவரும் வாங்கிப்படித்தால் பல அரிய கதைகளை ஒருங்கே எளிதிலுணர்ந்து களிக்கலாம். இவ்வாறு, ஓர் உபகாரத்தை நம்மவர்க்குச் செய்தவர், சென்னை, ஸெண்ட்தோம்காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ உ. வே. தி. வேங்கடராமஐயங்காரவர்கள். இவர்கள், தம் அரியவேலையின் எஞ்சியபகுதியையும் விரைந்து முடித்துத் தமிழகத்தை மகிழ்வூட்டுவார்களென்றே நம்புகிறேன். ஐயங்காரவர்கள், தம்நூலை ஹைகோர்ட்டு நீதிபதி கௌரவ ஸர். எஸ். சுப்பிரமணியஐயரவர்கட்கு, அவர்கள் அநுமதிப்படி, ஸமர்ப்பித்திருக்கிறார்கள். இதன் விலை அணா 8.

திருக்குற்றாலத்தலபுராணவசனம்:—நம் தமிழ் நாட்டில் வழங்கும் பழைய தமிழ்ப் புராணங்களுள்ளே, திரிகூடராசப்பகவிராயரால் இயற்றப்பெற்ற திருக்குற்றாலப்புராணமானது, சொன்னோக்கம் பொருணோக்கந் தொடைநோக்க நடைநோக்கங்களிற் சிறந்த தொன்றென்பது அறிஞரெல்லாம் நன்கறிந்தது. இப்புராணம் பாண்டிநாட்டுத் திருக்குற்றாலத்தின் விசேடங்களை நன்கு விளக்குவது. இதனை இதுகாறும் படித்து இம்மை மறுமைப் பயன்களுக் குரியராய் நின்றவர், பெரும்பாலும் பண்டிதரேயென்னலாம்; நம் நாட்டில் தமிழ்ப்பாவினத்திலமைந்த நூல்களை அப்பண்டிதரன்றிச் சாதாரண ஜனங்களும் அறிந்துகளித்தல் கூடாதன்றோ. ஆயினும், இப்போது திருக்குற்றாலப்புராணத்தைப் பற்றிய மட்டில் அக்குறை நீக்கப்பட்டிருக்கின்றதையறிந்து மகிழ்கின்றோம். திரிகூடராசப்ப கவிராயரது புராணப் பொருளை, சிறிதும் விடாமல், இனிய எளியவசன நடையில், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் ஸ்ரீமத். மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வசனத்தையும், இதன்மூலபுராணத்தையும் யாம் ஒப்புநோக்கி வருங்கால், அப்புராணச் செய்யுள்களின் பொழிப்புரையே இவ்வசன நூலாகுமென்று நன்கு தெரிய வந்தது. இதனால், திருக்குற்றாலப் புராணத்துக்கு ஓர் உரையும் அமைந்ததென்று சொல்லலாம். இவ்வசன நூல், நல்லகாகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இனிய வசன நடையில், திருப்பரங்கிரிப் புராணம், திருச்செந்தூர்ப்புராணம், பாவநாசத்தலபுராணம், புதுவைத்தலபுராணமுதலியவற்றை இதற்குமுன்பு எழுதி வெளியிட்ட கவிராயரவர்கள், இப்போது, தென்னாட்டார் பெரிதும் கண்டு களிக்கத்தக்க திருக்குற்றாலப்புராணத்தையும் மொழிப்பெயர்த்துதவியது போலவே,இன்னும் பல நூல்களை நடைப்படுத்தித் தருவார்களென்று நம்புகிறோம். இதன் விலை ரூ. 1.

பத்திராசிரியர்.